விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஐப்பசி 23 | திங்கட்கிழமை | (08.11.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 325

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சிறந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## பலத்த காற்றுடன் கூடிய மழை மேலும் சில தினங்கள் நீடிக்கும்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்குப் பகுதியில் இன்னும் சிலதினங்களுக்கு பலத்த காற்றுடன் கூடிய மழை நீடிக்கும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

சற்றுப் பலமான காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

காற்றினால் முறிந்து வீழ்ந்து ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய மரங்கள், மரக்கிளைகள் வீடுகளுக்கு அருகே காணப்பட்டால் அவற்றை(14 ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்த இந்தியப் படையினருக்கு கொழும்பில் மணிமண்டபம் அமையும்?

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் கீழ் அமைதிப்படையாக இலங்கையில் நிலை கொண்டிருந்தவேளை கொல்லப்பட்ட ஆயிரத்து எழுநூறு இந்தியப் படையினரை இலங்கை அரசு கௌரவிக்கவுள்ளது.

அவர்களைக் கௌரவிக்கும் முகமாக கொழும்பில் மணிமண்டபம் ஒன்றை அமைபதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(14 ஆம் பக்கம் பார்க்க)



கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு, மாணிக்கம் பாக்கியம் தம்பதிகள் ஞாபகார்த்தமாக அவர்களின் மகன் மா.சுப்பிரமணியத்தால் அமைத்துக்கொடுக்கப்பட்ட மூன்று மாடிக்கட்டடத்தின் அழகிய தோற்றத்தை படத்தில் காண்கிறீர்கள்.

இக்கட்டடம் நாளை மறுதினம் புதன்கிழமை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

# இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சகல சமூகங்களுடும் ஏற்கும் தீர்வே பேச்சுக்களில் எட்டப்படவேண்டும்

## இந்திய - இலங்கை தலைவர்கள் கூட்டறிக்கை

(புதுடில்லி)

**இலங்கையில் சகல சமூகத்தவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பரந்தளவிலான பேச்சுவார்த்தைகள் மூலம் எட்டப்படும் தீர்வுக்கே ஆதரவு வழங்குவதாக இந்தியா மீண்டும் அறிவித்துள்ளது.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்திய விஜயத்தின் போது ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து இருநாட்டுத் தலைவர்களும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும்,

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கம் நாளை கிளிநொச்சிக்கு

### இன்று லண்டனிலிருந்து புறப்படுகிறார்

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் நாளை கிளிநொச்சிக்கு வரவுள்ளார்.

இன்று லண்டனிலிருந்து புறப்படும் அவரும், அவரது பாரியார் அடேல் பாலசிங்கமும் நாளை அதிகாலை கொழும்பை வந்தடைந்து உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சி வரவுள்ளனர். தீபாவளி தினத்தன்று நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன், தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து பேசவுள்ளார்.

அதற்கு முன் அன்ரன் பாலசிங்கத்திற்கும் தலைவர் வே.பிரபாகரனுக்கும் இடையில் மந்திராலோசனை நடைபெறவுள்ளது. அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுவரும் இவ்வேளையில் இச்சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையுமென கூறப்படுகிறது.

இதேவேளை கிளிநொச்சிக்குவரும் அன்ரன் பாலசிங்கம் தம்பதியினர் ஒருவார காலம் கிளிநொச்சியில் தங்கி நின்று சமாதானம் தொடர்பாக தலைவர் பிரபாகரனுடனும் முக்கியபிரமுகர்களுடனும் ஆலோசனையில் ஈடுபடவுள்ளதாகக் கூறப்படுகிறது. (ச-8)

## அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2006 இல் தான் நடக்குமாம்

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறமாட்டாது என்று தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளதாக இலங்கை வானொலி நேற்றுத் தெரிவித்தது. 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறலாம் என்ற ஊகங்களின் மத்தியிலேயே தேர்தல் செயலகம் இவ்வாறு கூறியுள்ளது.

2005 ஆம் ஆண்டு தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான திட்டம் எதுவும் தம்மிடம் இல்லை என்றும், அவ்வாறான தேர்தல் ஒன்றுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்றும் செயலகம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.அரசியல் யாப்புப் பிரமாணங்களின்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2006 ஆம் ஆண்டு நடத்தப்படும் என்று சில சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளதாகவும் இலங்கை வானொலி தெரிவித்தது. (14 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் – கூட்டமைப்பு சந்திப்பு ஒத்திவைப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில்நாளை நடைபெறவிருந்த சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சனின் வன்னி விஜயத்தை அடுத்தே இச்சந்திப்பு எதிர்வரும் 16 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளினுடனான நோர்வே அமைச்சரின் சந்திப்பைத் தொடர்ந்து இடம்பெறும் இச்சந்திப்பில் சமாதான முயற்சிபற்றியும் கூட்டமைப்பினர் ஆற்றவேண்டிய பங்கு பணிகள் பற்றியும் ஆராயப்படவுள்ளது. (த-08)

## பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்கு அரசின் அழைப்பிற்காக காத்திருக்கின்றோம்

### மட்டு. அம்பாறைஅரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் மீது ஆசைகொண்டவர்களோ யுத்தத்தில் மோகம் கொண்டவர்களோ அல்லர். ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டதாலேயே ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள் என்பதை சிங்கள சமூகம் உணர்ந்துகொள்ள வேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடிப் பிரதேச வர்த்தகர்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்ற போது அதில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

இலங்கை சுதந்திரமடைந்த நாள்முதல் இன்றுவரை தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டே வருகின்றன.

இதனால் தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க ஆயுதம் ஏந்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

போராட்டத்தில் பெரும் வெற்றிகளைக் குவித்து எமது ஆயுத பலத்தை சிங்கள ஆட்சியாளர்களுக்கு காண்பித்தோம்.

இதனால்தான் அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு எமக்கு அழைப்பு விடுத்தார்கள்.

நாமும் நிரந்தர சமாதானம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்பதற்காக ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் ஆறுசுற்றுப் பேச்சு

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னிகரில்லாத் தமிழர் ஜி.ஜி.பொன்னம்பலம்

**அ.விநாயகமூர்த்தி**
**தலைவர், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்**

"தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்று தமிழ் மக்களின் உரிமைக்காக வாதாடி தமிழர்களை தலைநிமிர வைத்த தன்னிகரில்லாத் தலைவர் சட்ட நிபுணர் ஜி.ஜி.பொன்னம்பலம் (Q.C). அவரது 104ஆவது பிறந்த



தினமாகிய இன்று அவரைப்பற்றிச் சிந்திப்பது மிகப் பொருத்தமானதொன்றாகும்.

1901.11.08 அன்று பிறந்த இவர் இங்கிலாந்தில் சட்டக் கல்வியைப் பூர்த்திசெய்து பட்டம் பெறறு இலங்கை திரும்பி 1920ஆம் ஆண டளவில் இலங்கை உயர் நீதிமன்றத்தில அப்புக்காத்தாக தன்னைப் பதிவுசெய்துகொண்டார். அபபோதே அரசிலிலும் ஈடுபடத் தொடங்கினார்.

ஜி.ஜி.பொன்னம்பலம் சேர் பொன். ராமநாதனின் மறைவிற்குப் பின்னர் தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தார். இந் நாடு சிங்கள நாடென்றும் இந் நாடு சிங்களவர்க்கே சொந்தம்

## இன்று அவரது பிறந்ததினம்

என்றும் சிங்களத் தலைவர்களிடையே ஒரு எண்ணம் வலுப்பெற்ற நிலையில் சிங்கள மகாசபையை அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயகா தோற்றிவித்தார். சிறு பான்மையினரை ஒதுக்கும் திட்டமிட்ட சூழ்ச்சியை உணர்ந்த ஜி.ஜி.பொன்னம்பலம் தமிழர்களைப் பாதுகாக்கும் முறையிலும் தமிழர்களின் குரலாக இருக்கும் பொருட்டும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியை 1944ஆம் ஆண்டில் நிறுவினார். அக்கட்சி அன்று தொட்டு இன்றுவரை தமிழர்களின் பாதுகாவலனாக இருந்துவருகிறது.

ஒவ்வொரு தமிழனும் இலங்கையின் எந்தப் பாகத்திலும் சம உரிமையுடனும் சுய கௌரவத்துடனும வாழ்வதற்கு உரித்துடையவர் என்பதே அவருடைய கருத்தாக இருந்தது. தனிச் சிங்களச் சட்டமூலம் நாடளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது அம்மசோதா அமுல் படுத்தப்படுமேயானால் நாடு பிளவுபடுமென ஆணித்தரமாக அவர் நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தார். 1933ஆம் ஆண்டு சட்ட சபை அங்கத்தவரான காலம் தொட்டு 1943ஆம் ஆண்டு காலப்பகுதிவரை சட்ட சபையிலும் அதற்கு வெளியிலும் மலைநாட்டுத் தமிழர்களின் உரிமைக்காகவும் அவர்களுடைய பொருளாதார முன்னேற்றத்திற்காக போராடியும், வாதாடியும் வந்திருந்தார்.

நாடளுமனறத்தில் முதன் முறையாக தமிழில் உரையாற்றிய பெருமையும் 1948ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது சுதந்திர தின விழாவில் நந்திக் கொடியையும் ஏற்றுவித்த பெருமை அமரர் ஜி. ஜி.பொன்னம்பலம் அவர்களையே சாரும்.

1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் பிரிவினையைக் கோருவதென்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தீர்மானித்த போதும் அது அவர்களது அடிமனதில உதித்ததொன்றல்ல. ஆனால் அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயகா அவர்கள் தான், "சிங்களம் மட்டும்" சட்டத்தை பாராளுமன்றத்தில அறிமுகப்படுத்தியதன் மூலம் இந்நாட்டில் தமிழ் பிரிவினைவாத கோஷத்திற்கு அடித்தளமிட்டார். அப்போது ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் சிங்களம் மட்டும் என்ற சட்டத்தை எதிர்த்துப் பேசியதுடன் அது எமது பாதைகள் பிரிந்து போவதற்கு வழி வகுக்கும் என்றும் அரசாங்கத்தையும் சிங்கள மக்களையும் எச்சரித்தார்.

1976 ஜனவரி 30ஆம் திகதி அன்று கலைஞர் கருணாநிதியின் தமிழக அரசு ஊழல் குற்றச்சாட்டுக்களின் பேரில் இந்திரா காந்தியின் மத்திய அரசாங்கத்தால் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்திய உச்ச நீதிமன்றத்தின் நீதியரசா சர்க்காதியா தலைமையில் தனி மனித விசாரணை ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. சட்டத் திறமைக்கு பெரும் புகழ் பெற்றிருந்த ஜி.ஜி.பொன்னமபலம், கலைஞர் கருணாநிதியின் கோரிக்கையின் பேரில் அவ் ஆணைக்குழுவின் முன் தோன்றினார். மத்திய மாநில அரசு உறவில் பின்பற்றுகின்ற இரட்டைத் தளங்களை ஆழமாக ஆராய்ந்து விளக்கிய அவர் சாட்சியம் அளிக்க இருப்பவர்களை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கும்படி கோரினார். நீதியரசர் அதனை நிராகரித்தார். அப்போது ஜி.ஜி. பொன்னம்பலம், கருணாநிதிமீது பழிவாங்கும் நோக்குடன் "கங்காரு" நீதிமன்றத்தின் இயல்பும் தொழிற்பாட்டு நடைமுறைகளும் இருக்கின்றன என சட்ட வாதங்களுடன் வெளிப்படுத்தின. பின்னர் தமிழ் நாட்டு வழக்கறிஞர்களைக்கொண்டதான தமது உயர் வழக்கறிஞர் குழுவினருடன் வெளி நடப்புச்செய்து அந்நீதிமன்ற விசாரணைகளைத் தொடர்நதும் பகிஷ்கரித்தார். அதுவே ஆணைக்குழுவின் கலைவிற்கு காரணமாக அமைந்ததைத் தொடர்ந்து கருணாநிதி வெற்றியீட்டினார். பின்னர் மெரீனா கடற்கரையில் உள்ள சீரணி அரங்கத்தில் கருணாநிதி நடத்திய மாபெரும நன்றி பாராட்டும் நிகழ்வில் "உண்மையான நடபிற்கு சங்கத்தமிழ் இலக்கியம் வகுத்துரைத்துள்ள உயர் ஒழுக்க விழுமியங்களை ஜிஜிபுதுப்பித் தொழுகியுள்ளார்." என்று அவரைப்பாராட்டினார்.

அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் மற்றும் மூன்று பாராளுமனற உறுப்பினாகள் மீதான யூதர்கள் இல்லாத (ட்ரயல்-அற்-பார்) நீதிமன்றில் அவர்களுக்காக வாதடி அந்த நீதிமன்றம் அதனை விசாரிக்க உரித்துடையதல்ல என்ற சட்ட நுட்பத்தை எடுத்துரைத்து இவ் வழக்கினைத் தகர்த்தெறிந்தார். மிகத் திறமையாக குற்றவியல் வழக்கறிஞராகத் திகழ்ந்த இவர் ரஞ்சனி தக்ஷிஹப் வழக்கில் இங்கிலாந்தில் இருந்து வருகைதந்து சாட்சியமளித்த கைவிரல் அடையாள நிபுணரைக் குறுக்கு விசாரணை செய்ததைத்தொடர்ந்து கைவிரல் அடையாளம் பற்றிய சட்டமே திருத்தியமைக்கப்பட்டது.

தமிழ் மக்களின் உரிமைக்காகவும் நலன்களுக்காகவும் தனது இறுதி மூச்சுவரை அரசியல் ரீதியாகப் போராடி 1977ஆம் ஆண்டு மாசி மாதம் 9ஆம் நாள் அமரத்துவம் எய்திய வீரத் தமிழனுக்கு நன்றி செலுத்த உண்மையிலேயே தமிழ்ச் சமூகம் கடமைப்பட்டுள்ளது. □

## வீதி திருத்தப்படவில்லை

(கற்கோவளம்)

அண்மையில் பெய்த மழையினால் பருத்தித்துறை ஓடக்கரை மின்சார நிலைய வீதி சேறும் சகதியுமான நிலையில் உள்ளது.

இதனால் அப் பகுதியில் வசிக்கும் மக்களும், அந்த வீதியால் பயணிக்கும் மக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்.

இங்கு தார் வீதி அமைப்பதற்குத் தேவையான பொருட்கள் கொண்டு வரப்பட்டு அப்பகுதியில் பல மாதங்கள் கடந்துவிட்டபோதும் இன்னமும் வீதி அமைப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென அப் பகுதியில் வசிக்கும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-104)

## சிரமதானம்

(புங்குடுதீவு)

மாவீரர் நாளையொட்டி தீவக சாட்டி மாவீரர் துயிலும் இல்ல சிரமதான பணியில், புங்குடுதீவு நயினாதீவு ப.நோ.கூ.சங்க பணியாளர்கள், தபாலக ஊழியர்கள் ஆகியோர் இன்று சிரம தானப் பணியில் ஈடுபடவுள்ளனர்.(க-126)

## 'பூநகரி வெற்றிச்சமர்' நினைவுநிகழ்வு 13 ஆம் திகதி கொண்டாடப்படும்

(பூநகரி)

பூநகரி வெற்றிச் சமரின் பதினொராம் ஆண்டின் நினைவு நிகழ்வுகள் எதிர்வரும் 13ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளால் 1993ஆம் ஆண்டு பூநகரி நாகதேவன் துறை, ஞானைவளம் கூட்டுப்படைத்தளம், தவளைப்பாய்ச்சல் நடவடிக்கை மூலம் வெற்றிகரமாக அழிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இன் நடவடிக்கையினால் பெருமளவு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன பெருமளவு நவீன யுத்த தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன.

இந்நிகழ்வினை பெரும் வெற்றி விழாவாக கொண்டாடுவதறகான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (க-121)







வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் பிரதேச கலாசார விழாவில் ஆய்வரங்கத்திற்குத் தலைமை வகித்த பேராசிரியர் அ.சண்முகதாஸ் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், சமுர்த்தி முகாமையாளர் இ.கிருஷ்ணராஜா ஆகியோரை முதலாவது படத்திலும், பிரதேச செயலர் சி.சத்தியசீலனுடன் விழாவிற்கு வருகைதந்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் செ.கஜேந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், கி.சிவனேசன், துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, கரவெட்டி கலாசார உத்தியோகத்தர் செல்வி சே.செல்வ சுகுணா ஆகியோருடன் கௌரவிக்கப்பட்ட பல்துறை சார்ந்த கலைஞர்களையும் இதில் இடம் பெற்ற மாணவிகளின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-துன்னாலை செய்தியாளர்)

# பிரதி அமைச்சர் விஸ்வ வர்ணபால தினேஸின் குடும்பத்தைச் சந்தித்தார்

ஈராக்கில் முஸ்லிம் தீவிர வாதிகளினால் பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தினேஸ் தர்மேந்திரா இராஜரத்தினத்தின் குடும்பத்தினரை நேற்று முன்தினம் வெளிவிவகார பிரதியமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார்.

இவரது விடுதலைக்காக இராஜதந்திர மட்டத்திலும் ஈராக்கிய மத தலைவர்கள் மட்டத்திலும் வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டு வருகின்ற முயற்சிகள் குறித்து அமைச்சர் எடுத்துக் கூறினார்.

இச்சந்திப்பில் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள். இதேவேளை, ஈராக் தீவிரவாதிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள தினேஸ் தர்மேந்திராவை விடுதலைசெய்ய அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் எனறும் இல்லாவிட்டால் அந்த தமிழ்க் கைதியின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் எனவும் ஐக்கியதேசியக் கட்சியின் அரசுக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவ்வாறு அரசினால் குறிப்பிட்ட நபரை விடுதலை செய்ய முடியாதிருந்தால் அந்தப் பொறுப்பை தம்மிடம் ஒப்படைக்குமாறு ஐக்கிய தேசியக் கடசியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறினார்.

தினேஸ் தர்மேந்திராவை விடுதலை செய்யும் வகையில் தீவிர வாதிகளுடன் பேச்சு நடாத்த ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனா தயாராகவுள்ளார் எனவும் அவர் மேலும் கூறினார். (க)

# தமிழ்க் கைதியொருவரின் விடுதலைக்கு சர்வதேச மன்னிப்புச்சபை சிபார்சு!

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறைத்தண்டனை விதிக்கப்படடுள்ள தமிழ் அரசியல் கைதியான நல்லரட்ணம் சிங்கராஜாவை விடுதலை செய்யுமாறு அனைத்துலக மன்னிப்புச்சபை இலங்கை அரசைக் கேட்டுள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த இந்த தண்டனைக் கைதி 1993ஆம் ஆண்டு ஆடி மாதம் 16ஆம் திகதி மட்டக்களப்பில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் அங்கம்பெற்று ஆயுதப் பயிற்சி பெற்றது, அரந்தலாவையில் இராணுவத்தினரைக் கொலை செய்தது, சட்டவிரோதமான முறையில் கூடி 4 இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் மேற்கொண்டது ஆகிய குற்றச்சாட்டுகள் இவர் மீது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு மேல் நீதிமன்றமொன்று இவ்வழக்கை விசாரித்து இவருக்கு 50 வருட சிறைத் தண்டனை விதித்தபோதிலும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேனமுறையீட்டையடுத்து தண்டனைக் காலம் 35 வருடங்களாகக் குறைக்கப்பட்டது.

இத்தீர்ப்பு தொடர்பாக மனித உரிமை அமைப்புகள் அனைத்துலக மன்னிப்புச் சபைக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவிற்கும் புகார் தெரிவித்திருந்தன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு இவரது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதால் இவர் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது மீண்டும் விசாரணை நடைபெற வேண்டும் [illegible] வேண்டும் என்றும் [illegible] திருந்தன. (க-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரில் இடம்பெற்ற மோதல்களில் 10பேர் பலி;4பேர் படுகாயம்

(ஸ்ரீநகர்)

மத்திய உள்துறை அமைச்சர் சிவ்ராஜ் பட்டேல் நேற்று முன்தினம் 3 நாள் பயணமாக ஸ்ரீநகர் வந்துசேர்ந்தார். அவருடன் மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சா குலாம் நபி ஆசாத்தும் வந்தார்.

பட்டேல் ஸ்ரீநகர் வந்துசேர்ந்த சமயம் பார்த்து காஷ்மீர் தீவிரவாதிகள் ஸ்ரீநகரின் பரமுலாம் மாவட்டத்தின் சோர்பார் நகரில் உள்ள இராணுவமுகாம் ஒன்றின் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தினார்கள்.

இந்த நகரத்திலுள்ள எல்லைப் பாதுகாப்புப்படை முகாம் மீது காஷ்மீர் தீவிரவாதிகள் நேற்றுக் காலை தற்கொலைத தாக்குதல் நடத்த முயன்றார்கள். வாசலில காவலுக்கு நின்ற எல்லைப் பாதுகாப்புப் படைவீரா மீது தவிரவாதிகள் கையெறிகுணடுகளை வீசி துப்பாக்கியால சுட்டார்கள்.

அப்போது முகாமில் இருந்த எல்லைப் பாதுகாப்புப் படைவீரர்கள் சுதாகரிததுக்கொண்டு தீவிரவாதிகள் 4பேரையும சுட்டு வீழ்த்தினார்கள்.

அப்போது நடந்த சண்டையில் எல்லைப் பாதுகாப்பு படைவீரர் மகான்சிங் என்பவர் பலியானார். 4வீராகள் காயமடைந்தனர்.

இதனிடையே பூங்ச் மாவட்டத்தில் உள்ள மெண்டார் பகுதிக் காட்டில் இந்தியப படையினர் நேற்றுக் காலை ரோந்து வந்தனர். அப்போது வெளிநாட்டுக் கூலிப்படையினர் 5பேர் கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டி இந்தியப் பகுதிக்குள் ஊடுருவினார்கள்.

இந்திய வீரர்கள் அந்தக் கூலிப் படையினரையும் சுட்டுக்கொன்றார்கள். அவர்களிடமிருந்த ஆயுதங்கள, வெடிபொருடகள் கைப்பற்றப்பட்டன. வேறுதீவிரவாதிகள் யாராவது பதுங்கியிருக்கிறார்களா என்று இராணுவத்தினா அந்தப் பகுதியல் தேடுதல்வேட்டை நடத்திவருகிறார்கள.

இதனிடையே காஷ்மீர் வந்துள்ள மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் அங்கு கவானா, முதல்வா், துணை முதல்வர், எம்.எல்.ஏ.க்கள் மற்றும் உயர் அதிகாரிகளைச் சநதிததுப பேசவிருக்கிறா.

காஷ்மீரில் பள்ளத்தாக்குப் பகுதி,



ஜம்மு பகுதி, லடாக் பகுதி போன்றவற்றை பட்டேல் சுற்றிப் பார்க்கவுள்ளார். ஜம்முவில் இந்திய - பாக். எல்லையில் வேலி அமைக்குமபணியையும் அவர் பார்வையிடுவார். இந்த மாதம் 3ஆவது வாரத்தில் பிரதமர் மன்மோகன் சிங் காஷ்மீரில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கிறார். அவரது வருகைக்கு முன்னோட்டமாக சிவராஜ் பட்டேல் காஷ்மீர் சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (ப)

# இந்தியா மீது நம்பிக்கை

ஐ.நா.சபையின் பாதுகாப்புப் பேரவை நிரந்தர உறுபபினராக இனனும் சில ஆணடுகளில் இநதியா இடம்பெற்றே தரும் என்று பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் ஜோன் மேயர் கூறியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று நடைபெற்ற ஹிந்துஸ்தான் டைம்ஸ் நாளிதழின் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய ஜோன் மேயர்,

ஐ.நா பாதுகாப்புப் பேரவையின் தற்பொழுது உள்ள 5 நிரந்தர உறுப்பினர்கள் உலகின் உணமையான பிரதிநிதித்துவததை பிரதிபலிக்கவில்லையென்றும் பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளுடன் பொருளாதார சக்தியாக உயர்ந்துவரும் இந்தியாவும் நிரந்தர உறுப்பினராவது தவிர்க்கமுடியாது என்று கூறினார்.

ஐ.நா.பாதுகாப்புப் பேரவையில் மட்டுமல்ல, உலகில் முன்னேறிய நாடுகளின் கூட்டமைப்பான ஜி-8இலும் இந்தியா இடம்பெறப்போவது உறுதி என்று கூறினார். இப்படிப்பட்ட அமைப்புகளில் இந்தியா இடம்பெறவில்லையென்றால் அது அநத அமைப்புகள்தான் அர்த்த மற்றதாகிவிடும் எனறு ஜோன் மேயர் கூறியுளளார். (ப)

WORLD NEWS
உலக தரிசனம்

# சிறையிலிருந்து தப்ப முயன்ற பயங்கரவாதியை நேபாள பொலிஸார் மடக்கிப்பிடித்தனர்

நேபாள நாட்டுச் சிறையிலிருந்து தப்பிக்கமுயன்ற, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சர்வதேசக் குற்றவாளியான சார்லஸ் சோப்பிராஜின் அந்நாட்டுப் பொலிஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளான்.

சர்வதேசரீதியாகப் பல கொலை, கொள்ளை, கற்பழிப்பு,கடத்தல் வழக்குகளில தொடர்புடைய சோப்ராஜ் போதை மருந்துக் கடத்தல் மற்றும் வெளிநாட்டுப் பயணிகளிடம் கொள்ளையடித்த குற்றத்திற்காக சுமார் 20 வருடங்கள் இந்திய சிறையில் அடைக்கப்படடிருந்தான. பின்னா 1997ஆம் ஆண்டு பிரான்சுக்கு நாடு கடத்தப்பட்டான்.

1975இல் நேபாளத் தலைநகரான காத்மண்டுவில் அமெரிக்கப் பெண் ஒருவரின் கொலை தொடர்பாக சோப்ராஜை நேபாளப் பொலிஸ் பல ஆண்டுகளாகத் தேடிவந்தது. கடந்த வருடம ஆகஸ்ட் மாதம காத்மண்ட் சூதாட்டக் கிளப் ஒன்றில் சோப்ராஜ் கைது செய்யப்பட்டான். அமெரிக்கப் பெண் கொலை வழக்கில் சோப்ராஜிற்கு நேளாள நீதிமனறம் கடநத ஆகஸ்ட் மாதம ஆயுள் தண்டனை விதித்தது.

காத்மண்டு சிறையில் அடைக்கப்பட்ட சோப்ராஜ் சிறையிலிருந்து தப்பிக்கச் சிலர் உதவினர். 'லப்ரொப்' கணனி, கையடக்கத் தொலைபேசி போன்ற தொடாபுசாதனங்கள் அவனுக்குக் கிடைத்தன. கணனி மூலம் தனது நண்பனுக்கு இணைய அஞ்சல் மூலமாக சோப்ராஜ் தகவல் அனுப்பியிருக்கிறான்.

அததகவலில் சிறைக்காவலிலுள்ள பொலிஸாரை மயங்கவைக்க இரசாயனப் பொ[illegible]ட்கள் சிலவற்றை அனுப்புமாறு சோப்ரா[illegible] கேட்டிருக்கிறான். அத்துடன் தான் சிறையிலிருந்து தப்பித்ததும் முதலில் இந்தியாவுக்கும் பின்னர் பிரான்சுக்கும் செல்ல உதவுமாறும் அந்த நணபனிடம் கேட்டிருக்கிறான்.

பயங்கரவாதியான சோப்ராஜிற்கு நவீன தொடர்பாடல் வசதிகள் வழங்கப்பட்டிருப்பதாக தகவலகள் வெளியானதைத தொடர்ந்து அது தொடர்பாக விசாரணை நடாத்தி அறையைச் சோதனையிடடனர். அப்போது கணனி மற்றும் கையடக்கத் தொலைபேசி பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கணணியைப் பரீட்சித்துப் பார்த்தபோது சோப்ராஜ் இணைய அஞ்சல் மூலம் தனது நண்பனுக்கு தகவலனுப்பிய விபரம் கண்டுபிடிககப்பட்டது.

இதனையடுத்த அவன் சிறையிலிருந்து தப்பிக்க எடுத்த முயற்சி முறியடிககப்பட்டதாக நேபாளப் பொலிஸ் செயதித்தொடர்பாளர் ரமேஷ்சிங் தெரிவித்திருக்கிறார். (7)

# சோனியாவின் திடீர் நடவடிக்கை; தமிழக காங். பொறுப்பாளர் மாற்றம்



(புதுடில்லி)

தமிழக காஙகிரஸ் பொறுப்பாளராக மார்கரெட் ஆலவா நியமிக்கபபட்டுள்ளார். சல்மான் குர்ஷித் உத்தரப்பிரதேச மாநிலத தலைவராக நியமனம் செய்யப்படடுள்ளார்.

தமிழக காங்கிரஸ் பொறுப்பாளராக இருந்த கமல்நாத் மத்திய அமைச்சரானதையடுத்து, அகில இந்திய பொதுச் செயலாளர் சல்மான் குர்ஷித் புதிய பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அவருக்கு உதவியாக அகில இந்தியச் செயலாளர் கிருஷணமூர்த்தியும் நியமனம் செய்யப்பட்டார். அவர்கள் தமிழ்நாட்டில் காங்கிரஸ உறுப்பினா சேர்ப்புப் பணியை வேகப்படுத்தி வந்தனர்.

சமீபத்தில் முத்துராமலிங்கதேவர் பிறந்தநாளின்போது சல்மான் குர்ஷித் சென்னை வந்திருந்தார். ஈரோட்டில் மத்தய அமைச்சர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன தலைமையில் நடநத மத்திய அரசு சாதனை விளக்ககூட்டத்தில பங்கேற்று அவர் பேசினார். இப்போது அவரை அகில இந்திய காங்கிரஸ் திடீரென மாற்றியுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலக் காங்கிரஸ தலைவராக சல்மான் குர்ஷித் நேற்று முன்தினம் மாலை அறிவிக்கபபட்டார். உத்தரப்பிரதேச மாநில காங்கிரஸ் பொறுப்பாளரும் அகில இந்திய பொதுச் செயலாளருமான சதுர்வேதி இதை அறிவித்தார்.

இதுவரை மாநிலக் காங்கிரஸ் தலைவராக இருந்த ஜெகதாம்பிகா பிரசாத் மாற்றப்பட்டு சல்மான் குர்ஷித் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முதலமைச்சர் முலாயம்சிங் யாதவுக்குச் சரியான போட்டியாக இருக்கவேண்டும் என்பதற்காக சல்மான் குர்ஷித்தை அங்கு காங்கிரஸ் தலைவராகச் சோனியா நியமித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ற)

நோய்வாய்ப்பட்டிருக்கும் பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் உடல்நலம் பெற பலஸ்தீன மேற்குக்கரை நகரத்தில் ஆதரவாளர் ஒருவர் அரபாத் படத்தை வைத்துப் பிரார்த்தனை செய்கிறார்.



# ஈராக்கில் இடம்பெற்ற மூன்று கார் குண்டுத்தாக்குதல்களில் 40பேர் பலி;67பேர் படுகாயம்

(சமாரா)

ஈராக்கில் 3இடங்களில் நேற்று முன்தினம் கார்க்குண்டு வெடித்ததில் 40பேர் பலியாகியிருப்பதுடன் 67பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கு எதிரான கொரில்லாப் படைத்தாக்குதல் தொடர்ந்துவருகிறது. அமெரிக்க கூட்டணிப்படைகள் தங்கியுள்ள முகாம்கள், ஹோட்டல்கள் போன்ற இடங்களில் குண்டு வெடிப்பது சர்வசாதாரணமாகிவிட்டது.

இந்நிலையில்,நேற்று முன்தினம் சமாராப் பகுதியில் மூன்று கார்க்குண்டுகள் வெடித்தன. இங்குள்ள பொலிஸ் தலைமை அலுவலகம் நோக்கி ஒரு கார் சென்றதாகவும், அதைப் பொலிஸார் தடுத்து நிறுத்தியபோது அந்தக் கார் வெடித்துச் சிதறியதாகவும், அப்பகுதியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கார்க் குண்டுவெடிப்பில் 9 பொலிஸார் உட்பட 40பேர் உடல் சிதறிப பலியாகினர். 1[illegible] பொலிஸார் உட்பட 6[illegible] பேர் படுகாய[illegible] வர்களில் பொலிஸ் தலைமை அதிகாரி அல்- ஜர்மானியும் ஒருவர்.

இதேபகுதியில் மற்றொரு பொலிஸ் நிலையத்தில் 2வது கார்க்குண்டு வெடித்ததில் 10 பொலிஸார் பலியாகினர். 17 பேர் படுகாயமடைந்தனர். இங்குள்ள ஆசிரியர் கல்லூரி அருகே சென்ற அமெரிக்க இராணுவ வாகனத்தை தகர்க்கும் முயற்சியில் 3வது கார்க்குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்தது.

இந்தத் தாக்குதலில் 7பேர் பலியாகினர். 10பேர் காயமடைந்தனர். இந்தக் குண்டுவெடிப்பு தொடர்பாக 10பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ப)

# யாத்திரிகளுக்கு தடை

புனித றமழான் மாதத்தில் மக்கா நகருக்குச் செல்ல வந்த ஈராக் யாத்திரிகர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இவாகள் எல்லைப்பகுதியில் நிர்க்கதியாகியுள்ளனர்.

இந்த யாத்திரிகர்கள் தகுந்த பிரயாண ஆவணஙகளை வைத்திருந்தபோதும் சவு,தி எல்லைக் காவலர்கள் இவர்களை சவு,திக்குள் செல்ல அனுமதிக்கவில்லை.

இதனால் உணவு வசதிகள் இன்றி பலநாட்களாகப் பாலைவனத்தில் தங்கியுள்ளனர். மழையாலும் குளிராலும் கஷ்ரப்படுவதாக இந்த யாத்திரிகள் கூறினர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

# பெரியோர் இயல்பு

நீங்கள் என்ன தான் சொல்லுங்கள் பெரியவர்கள் என்றைக்கும் பெரியவர்கள் தான் சார்! பண்டித தீனதயாள் உபாத்யாயர் என்று ஒருவர் இருந்தார். அவரிடம் ஒரு பழக்கம் தினமும் தவறாமல் வானொலியில் செய்தி அறிக்கையைக் கேட்டுவிடுவார். அவர் எங்கு போனாலும் சரி... கையில் ஒரு வானொலி இருந்து கொண்டே இருக்கும்.

ஒருமுறை அவர் ரயிலில் பிராயாணம் செய்து கொண்டிருந்தார். செய்தி அறிக்கை ஒலிபரப்பாகும் நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. அவருக்கு எதிரில் இன்னொருவர் அமர்ந்திருந்தார். அவருடைய கையிலும் ஒரு வானொலி இருந்தது இன்னும் கொஞ்ச நேரத்தில் 'செய்தி அறிக்கை' வரப்போகின்றது. தீன தயாள்ஜி எதிரில் இருந்தவரைப் பார்த்து "ஐயா! உங்கள் வானொலியை ஒலிக்க விடுங்கள் செய்தி அறிகைகை கேட்கலாம்" என்றார்.

அவருக்கோ ஆச்சரியம் "என்ன இது? அவரிடமும வானொலி இருக்கிறது. அப்படி இருக்கும் போது எனது வானொலியை ஒலிக்க விடுமாறு கேட்கிறாரே" என்று நினைத்து அவரிடமே கேட்டார். "உங்களிடமும் வானொலி இருக்கிறது தானே அப்படி இருக்கும்போது ஏன் என்னிடம் கேட்கிறீர்கள்?" என்றார்.

இருந்தாலும் தீனதயாள்ஜி மீண்டும் வற்புறுத்தினார். எதிரில் இருந்தவர் "சரி" என்று கூறிவிட்டு வானொலியை இயக்கினார். செய்தி அறிக்கை ஒலிப்பரப்பானது. இரண்டுபேரும் கேட்டு முடித்தனர்.அதன் பின்பு தீனதயாள்ஜி சொன்னார். எனது வானொலியின் அனுமதிப்பத்திரம் நேற்றுடன் முடிந்துவிட்டது. அதை நான் மீண்டும் புதுப்பிக்காத வரையில் உபயோகப்படுத்த முடியாது... அதனால் தான் உங்கள் வானொலியை ஒலிக்க விடச்சொன்னேன் என்றார்.

அப்போது வானொலி அனுமதிப்பத்திரம் நடைமுறையில் இருந்த காலப்பகுதி இது நேர்மைக்கு ஒரு உதாரணம். இப்போது சொல்லுங்கள் பெரியவர்கள் பெரியவர்கள்தானே இன்னும் ஒரு நிகழ்ச்சி சொல்கிறேன் கேளுங்கள்.

வினோபாஜி இருந்தார் அல்லவா? 1931 ஆம் ஆண்டு ஒருநாள் அவரது ஆச்சிரமத்திற்கு வந்த கடிதங்களை எல்லாம் பிரித்துப் படித்துக் கொண்டிருந்தார். காந்திஜியிடம் இருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அதைப்பிரித்துப் படிக்கத் தொடங்கினார் வினோபா. படிக்கும் போதே அவரது முகம் சுருங்கிவிட்டது. படித்து முடித்ததும் அந்தக கடிதத்தைக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டார்.

பக்கத்தில் இருந்தவர் இதைப்பார்த்து மிகவும் ஆச்சரியமடைந்தார். "காந்திஜியிடமிருந்து கடிதம் வந்தால் அதை ஒவ்வொருவரும் அரிய பொக்கிஷமாக நினைக்கிறார்கள். அதைப் பலபேர் சேகரித்து பத்திரப்படுத்தி வைக்கிறார்கள். அப்படியிருக்கும் போது வினோபாஜி இதைக் கிழித்துப் போட்டு விட்டாரே" என்று திகைத்துப் போய் விட்டார் அவர்.

அப்படி அந்தக் கடிதத்தில் என்னதான் எழுதப்பட்டிருக்கும்? குப்பைக் கூடையில் கிடந்த கடதாசித் துண்டுகளை எல்லாம் பொறுக்கி ஒன்றாகச் சேர்த்துப் பொருத்திப் படித்துப் பார்த்தார். அதில் காந்திஜி என்ன எழுதியிருந்தார் தெரியுமா? "தங்களைப் போன்ற பெரிய மகானை நான் இதுவரையில் சந்தித்ததில்லை" என்று எழுதியிருந்தார். " என்ன இது... ப்த்திரப்படுத்தி வைக்க வேண்டிய ஒரு கடிதத்தை இப்படிப் பாழக்கி விட்டீர்களே " என்று கேட்டிருக்கிறார். அதற்கு வினோபா சொன்னாராம் " பெரியவர்கள் நம்மீது வைத்துள்ள அன்பு காரணமாக சில தவறுகள் இழைக்கலாம். அந்தத் தவறுகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது அதனால்த் தான் அந்தக்கடிதத்தை கிழித்தெறிந்தேன் என்றாராம். இது எளிமைக்கு ஒரு உதாரணம்.

ஒரு வேடிக்கை கவனித்தீர்களா? உங்களிடம் எளிமைக்கு ஒரு உதாரணம் கூறவேண்டும் என்றால் கூட நான் 1931ஆம் ஆண்டுக்குப் போக வேண்டியிருக்கிறது.

தென்கச்சீ கோ. சுவாமிநாதன்

# பாடசாலையில் ஆசிரியர்,மாணவர்களுக்கு இடையில் ஒழுக்கம் பேணப்பட வேண்டும்

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள்



(கொழும்பு)

காலத்துக்குக் காலம் அரசாங்கங்கள் மாறினாலும் மாற்றமடையாத நிலையான கல்விக்கொள்கை ஒன்று இந்த நாட்டுக்கு அவசியம் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

தங்காலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், அரசாங்கம் மாறும்போது அமைச்சர்களும் மாறிவிடுகின்றனர். இதனால் கல்விக்கொள்கைகளும் மாறிவிடுகின்றது.

இதேவேள்ள, பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையில் ஒழுக்கம் சீர்குலைந்து காணப்படுகின்றது.பிரபல பாடசாலைகளிலே இந்நிலை அதிகரித்துக் காணப்படுகிறது.

எனினும், கிராமப்புறப் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுககுமிடையிலான ஒழுககம் ஓரளவு நிலைத்துள்ளது. சில பாடசாலைகளில் கடமை நேரங்களின் போது ஆசிரியர்களும் மாணவர்களும் தமது தனிப்பட்ட தேவைகளுக்காக பாடசாலைகளில் இருந்து வெளியே செல்கின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியின் உரிய பயனைப்பெற முடியாதுள்ளது.

இதனால் பாடசாலைகளில் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையில் ஒழுக்கத்தைப் பாதுகாக்கும் செயற்பாடுகளில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது என பிரதமர் மேலும் தெரிவித்தார்.

(க-121,08)

# ஆட்சியைக் கைப்பற்றியது தவறென ஜனாதிபதி வெகுவிரைவில் உணர்வார்

## பேராசிரியர் ஜி.எல் பீரிஸ்



(கொழும்பு)

பெறுமதி மிக்க மனித உயிர்களை இழக்காது யுத்தத்தை நிறுத்தி அரசியல் ரீதியாக சகல மக்களுக்கும் நீதியான முறையில் தீர்வொன்றைக் காண்பதற்காகவே விடுதலைப் புலிகளுடன் ஆறு சுற்றுப்பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற அரசியல் கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சியே தொடர்ந்தும் ஆட்சியில் இருந்திருக்குமேயானால் மக்களின் நன்மதிப்பும் பூரண ஆதரவும் எமக்குக் கிடைத்திருக்கும்.

அத்துடன் இனப்பிரச்சினைக்கும் தீர்வு ஏற்பட்டிருக்கும். நாட்டில் சமாதானக் காற்று வீசிக்கொண்டிருக்கும்.

ஆனால், ஜனாதிபதி மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை பறித்து எமது ஆட்சியை குலைத்ததினால், அச்சந்தர்ப்பம் எம்மிடம் இருந்து கைநழுவிப்போனது.

இதற்கு நாங்கள் பொறுப்பல்ல. ஆனால் இன்று எமது ஆட்சியைக் கைப்பற்றி ஜனாதிபதி என்ன செய்கிறார்? விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள முழுசம்மதத்துடன். காத்திருப்பதாக தெரிவிக்கின்றாரே தவிர ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தையாவது ஆரம்பித்தாரா?

இதனால் எம்மிடம் இருந்து ஆட்சியைப் கைப்பற்றியது தவறு என ஜனாதிபதி வெகு விரைவில் உணர்ந்து கொள்வார் எனக் குறிப்பிட்டார்.

(ந-121)

# இராசிபலன்

**08.11.2004**

**(ஐப்பசி 23, திங்கட்கிழமை)**

**ஏகாதசி பின்னிரவு12.19 மணிவரை**

**பூரம் முற்பகல் 9.42 மணிவரை**

**இராகுகாலம் 7.35-9.05 மணிவரை**

**சுபநேரம் 12.05- 1.35 மணிவரை**

**ஏகாதசி விரதம், கௌரி விரதம் 17ஆம் நாள்**

**மேடம்** பணக்குறைவு, அஜீரணரோகம் மனக்கவலை காரியதாமதம்.

**இடபம்** தனவிரயம், ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், சிந்தனை மிகுதி.

**மிதுனம்** மனோ தைரியம், மாதர் நட்பு, எடுத்த காரியங்கள் கைகூடும், அன்னியர் சந்திப்பு.

**கடகம்** போசன சுகக்குறைவு, அதிக செலவு, மனோசங்கடம், கௌரவக்குறைவு.

**சிங்கம்** வெகுமானம், பெரியோர் சந்திப்பு, புதிய முயற்சி, வாக்கு மேன்மை.

**கன்னி** பிறருக்கு உதவுதல், தொழிற் சிந்தனை, காரிய தாமதம், இடமாற்றம்.

**துலாம்** குடும்ப சுகம், இஷ்டசித்தி, நண்பர்கள் சந்திப்பு, தனலாபம்.

**விருச்சிகம்** ஆரோக்கியம், சந்தோஷமான சம்பவம், எடுத்த கருமங்கள் கைகூடும், பிறர் உதவி.

**தனுசு** உடல்நலக் குறைவு, சரீரப் பிரயாசை, வீண்பயம், புதியமுயற்சி

**மகரம்** முழங்கால்வலி, எதிர்பாராத அச்சம், உறவினர் வெறுப்பு, தொழில் கஷ்டம்.

**கும்பம்** செல்வாக்கு, தேகநலன், காரிய அனுகூலம், கலந்துரையாடல்.

**மீனம்** சுபநிகழ்வு, தடைப்பட்ட கருமங்கள் கைகூடும், விருந்துபசாரம், தொழில்நன்மை.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

# காத்தான்குடி வன்முறைக்கு வெளிநாட்டின் ஒத்துழைப்பு !

(மட்டக்களப்பு)

காத்தான்குடியில் ஆரம்பித்த வன்முறை ஏனைய பகுதிகளுக்கும் பரவும் ஆபத்து இருப்பதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு காத்தான்குடியில் உள்ள சுபி முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் மஜீரல் ஸுரா என்ற அமைப்பினால் துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளதாகவும் அந்தப் பொலிஸ் அதிகாரி சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, காத்தான்குடியில் இடம்பெறும் வன்முறைகளின் பின்னணியில் வெளிநாடு ஒன்றில் ஒத்துழைப்பு இருப்பதாக தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் அந்தப் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

வெளிநாட்டு நிதியுதவியுடன் செயற்படும் இஸ்லாமிய அடிப்படை வாதிகளே இத்தகைய தாக்குதல்களை நடாத்தியிருக்கலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

(க)

# "வடிவமைப்பும் தொழில்நுட்பமும்" புதியபாடம் அடுத்த ஆண்டு அறிமுகம்

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் அடுத்த ஆண்டு தொடக்கம் "வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும்" என்ற புதிய பாடம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டின் சகல மாகாணங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 50 பாடசாலைகளில் தரம் 10 வகுப்புகளில் (முன்னோடி வேலைத் திட்டமாக) இப் புதிய பாடத்திட்டம் போதிக்கப்படவுள்ளது. மனைப் பொருளியல், விவசாயம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுடன் இணைந்ததாக "வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும்" என்ற இந்தப் புதிய பாடம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

புதிய பாடத்தைப் போதிக்கும் நடவடிக்கைகளில் முதல் கட்டமாக இந்த மாதம் பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்கள், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு துறைசார்ந்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் வலிகாமம், மன்னார் அம்பாறை, கல்குடா, திருகோணமலை ஆகிய 5 கல்வி வலயங்களில் இருந்து 6 பாடசாலைகளிற்கு இப் புதிய பாடம் போதிக்கப்படவுள்ளது.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த (சாதாரண தரம்)
# மாதிரிப் பரீட்சை-2004

## தமிழ்மொழியும் இலக்கியமும்

ஆக்கம்: திருமதி க.முத்துக்கிருஷ்ணன் B.A.Dip.Ed
யா/செங்குந்த இந்துக்கல்லூரி,
திருநெல்வேலி.

நேரம்: 1மணி

பகுதி I

**சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

01.மந்தமாருதம் பூஞ்சோலையிலுள்ள மலர்களின் நறுமணத்தைத் தாங்கி வந்தது. இதில் மாருதம் என்பது குறிக்கும் சொல்
i.தேன் ii.காற்று iii.அழகு iv.மகரந்தம்

02.மல்லிகைப் பூவில் நெஞ்சம் மகிழலாம். இதில் நெஞ்சம் என்பதைக் குறிக்கும் சொல்
i.மணம் ii.வயிறு iii.மார்பு iv.உடல்

03.இன்பவாழ்வைத் துணிந்து போற்றினேன். இதில் போற்றுதல் என்பதன் எதிர்ச்சொல்
i.தூற்றுதல் ii.காட்டுதல் iii.வாழ்த்துதல் iv.பரிதவித்தல்

04.கர்ணன் சிறந்த கொடைவள்ளல் ஆவார். இதில் வள்ளல் என்பதன் எதிர்ச்சொல்
i.புரவலன் ii.உலோபி iii.முதியவன் iv.இரவலன்

05.மதி போன்ற முகம் என்பதில் வரும் உவமேயம்
i.போன்ற ii.மதி iii.முகம் iv.மூன்றும்

06.ஆட்டின் மலத்தைக் குறிப்பது
i.விட்டை ii.எச்சம் iii.பிழுக்கை iv.சாணம்

07.மலைகளின் கூட்டத்தைக் குறிக்கும் சொல்
i.செண்டு ii.பந்தி iii.தொடர் iv.கூட்டம்

08.ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு. இங்கு வந்துள்ள உரிச்சொல்
i.வாடி ii.கொக்கு iii.ஓடி iv.உறு

09.வலமிடம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதினால்
i.வலம்+இடம் ii.வல+விடம் iii.வல+இடம் iv.வலம்+மிடம்

10.கலை இலக்கிய விழாக்கள் படைப்பிலக்கியத்துறையில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தி உள்ளன. இதில் பரிமாணம் என்பது
i.அளவு ii.அழகு iii.பார்வை iv.துன்பம்

11.வைக்கோலின் கூட்டம் கற்றை போல புகையிலைக் கூட்டம்
i.வரிசை ii.சிப்பம் iii.தோப்பு iv.கூட்டம்

12.சமாதானப் பேச்சுக்கள் கைகூடல் இன்றித் தவறுதல் நாட்டினை அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்லும். இதில் கைகூடல் என்பது
i.அனுகூலம் ii.தோல்வி iii.பேச்சு iv.உலகம்

13.சகோதரர் ஒன்றித்தனர். இதில் ஒன்றித்தல் என்பதைக் குறிக்கும் உவமைத் தொடர்
i.குன்றிற் தீபம் போல ii.நகமும் சதையும் போல
iii.ஓடும் புளியம்பழமும் போல iv.ஊமை கண்ட கனவு போல

14.தீமையைக் கண்டால் விலகவேண்டும் என்பதை விளக்கும் பழமொழி
i.சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது
ii.பழகப் பழகப் பாலும் புளிக்கும்
iii.துட்டரைக் கண்டால் தூர விலகவேண்டும்
iv.அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்

15.பாடம் முடிந்ததும் மாணவர் தமது சந்தேகங்களை எழுப்பினர். இதில் வந்துள்ள செயற்படுபொருள்
i.பாடம் ii.மாணவர் iii.எழுப்பினர் iv.சந்தேகங்களை

16.பணிந்து போதல் என்ற பொருள் தரும் மரபுத்தொடர்
i.வாலைக் கீழே போடுதல் ii.வாலாட்டுதல்
iii.வால் முறுக்குதல் iv.வால் காட்டுதல்

17.யானையின் ஆண், பெண்-களிறு, பிடி என்பது போல மானின் ஆண், பெண்
i.கடுவன்,மந்தி ii.போத்து,பிணா iii.கலை,பிணை iv.கடுவன்,பெட்டை

18.குழந்தை குறுகுறு நடந்து சிறுகை நீட்டியது. இதில் குறுகுறு என்பது
i.இணைமொழி ii.இரட்டைமொழி
iii.அடுக்குமொழி iv.அடுக்கிடுக்குமொழி

19.கயிறெனக் கிடந்தது பாம்பு. இங்கு வந்துள்ள இடைச்சொல்
i.கயிறு ii.பாம்பு iii.என iv.உ

20.பின்வருவனவற்றுள் பகாப்பதமாக அமைவது
i.அன்பன் ii.செய்யும் iii.அறிஞன் iv.நிலம்

21.மற்றோர் உயிர்ப்பொருளிலிருந்து தன் உணவை உறிஞ்சி வாழும் பிராணி
i.சஞ்சீவி ii.பட்டை iii.ஒட்டுண்ணி iv.தாவரஇலை

22.எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன்
i.ஞானி ii.தீர்க்கதரிசி iii.விஞ்ஞானி iv.சமயவாதி

23.தலையில் இழிந்த மயிர் என்னும் தொடரில் வரும் ஐந்தாம் வேற்றுமைப் பொருள் எது?
i.நீங்கல் ii.ஒப்பு iii.எல்லை iv.ஏது

24.பூவின் இதழ் என்பதில் தொக்கு நிற்கும் வேற்றுமை உருபு
i.ஐந்தாம் ii.ஆறாம் iii.நாலாம் iv.ஏழாம்

25.தேத்தண்ணி என்ற பேச்சுவழக்குச் சொல்லின் திருந்திய வடிவம்
i.தேநீர் ii.தேனீர் iii.தேத்தண்ணீர் iv.தேயிலைநீர்

26.ஊமன், மூகை, மூகன், மூங்கை என்னும் மொழிகள் குறிப்பிடும் ஒரு சொல்
i.எருது ii.உண்மை iii.முடவன் iv.ஊமை

27.பின்வரும் சொற்களுள் வினாவெழுத்துப் பெற்ற சொல் எது?
i.ஏகலைவன் ii.பங்களா iii.தபோவனம் iv.நிமலனோ

28.முனிவர்கள் வசிப்பதற்கு இலை தழை கொண்டு வேயப்பட்ட குடிசை
i.பங்கர் ii.பதுங்கு குழி iii.பன்னசாலை iv.குடில்

29.புல்+பாய் என்பதைச் சேர்த்து எழுதினால்
i.புற்பாய் ii.புல்பாய் iii.புல்லுப்பாய் iv.புல்ப்பாய்

30.செந்தாமரை என்ற சொல்லைப் புணர்த்தினால் வருவது
i.செந்+தாமரை ii.செம்மை+தாமரை
iii.சிவப்பு+தாமரை iv.செம்+தாமரை

31.மணிவிழா கொண்டாடப்படுவதற்குரிய ஆண்டுகள்
i.ஐம்பது ii.அறுபது iii.எழுபத்தைந்து iv.முப்பது

32.கட்டுக்கடங்காத இளைஞன்
i.சிறுபட்டி ii.விகடகவி iii.தேவராயன் iv.தபுதாரன்

33.பொற்றொடி ஆடி அசைந்து வந்தாள். இதில் பொற்றொடி என்பது
i.அன்மொழித்தொகை ii.உவமைத்தொகை
iii.பண்புத்தொகை iv.வேற்றுமைத்தொகை

34.பங்கயம் என்னும் வடசொல்லுக்குரிய தமிழ்ச்சொல்
i.கமலம் ii.தாமரை iii.அம்புஜம் iv.முளரி

35.சாரைப் பாம்பு கோழிக்குஞ்சைப் பிடித்தது. இதில் சாரைப்பாம்பு என்பது
i.வினைத் தொகை ii.வேற்றுமைத் தொகை
iii.உவமைத் தொகை iv.இரு பெயரொட்டுப் பண்புத்தொகை

36.இரு கண்ணும் சிவந்தது. இதில் வரும் வழுவமைதி
i.எண் ii.காலம் iii.திணை iv.இடம்

37.பகுதி இரட்டித்து காலம் காட்டும் சொல்லிற்கு உதாரணமாக அமைவது
i.வந்தான் ii.நின்றது iii.போனான் iv.புக்கான்

38.இயல்பு வழக்கில் ஒன்றாக வருவது
i.பெயரெச்சம் ii.வினையெச்சம் iii.மரூஉ iv.வினைமுற்று

39.மாரிக்காலத்திரவினில் வைகியோர் வேரித்தாரான் விருந்தெதிர் கொண்டான். இதில் வேரித்தாரான் என்பது
i.வண்டு மொய்க்கும் மாலையை அணிந்தவன்
ii.தேனொழுகும் மாலையை அணிந்தவன்
iii.மணம் வீசும் மாலையை அணிந்தவன்
iv.பூக்களால் ஆன மாலையை அணிந்தவன்

40.பின்வரும் வாக்கியங்களை பொருள் புலப்பட ஒரு பந்தியாக்கினால் வரும் ஒழுங்குமுறை
1.தனது வலிமையாலும் ஆட்சியாலும் பல நாடுகளை வென்றான்
2.தானே உலகின் அதிபதி என அகங்காரம் கொண்டான்
3.நமறுது என்னும் மன்னன் தனது தந்தையாகிய கன் ஆனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினான்
4.அவன் அஞ்ஞானத்துள் மூழ்கிப் பல அக்கிரமங்களைப் புரிந்தான்
5.இவனை அழிப்பதற்காக இறைவன் திட்டப்படி நபி அவர்கள் அவதரித்தார்.
i.3,1,2,4,5 ii.3,2,1,4,5 iii.1,2,4,3,5 iv.2,4,5,1,3

**கா.பொ.த(சா/த) மாணவர்களே!**
**வலம்புரியில் தொடர்ந்து பயிற்சி வினாத்தாள்கள் வெளிவரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ மீட்புநிதி மீளப்பெறுவோர்

*(நேற்றைய தொடர்ச்சி)*

379. யா/கோ/10123 திருமதி.சிவபாக்கியம் இராசையா
380. யா/கோ/10124 திருமதி.தவமணி சுப்பிரமணியம்
381. யா/கோ/10142 திருமதி.வள்ளியம்மை சிவகுரு
382. யா/கோ/10173 திரு. இளையதம்பி சின்னத்துரை
383. யா/கோ/10190 திருமதி. தங்கச்சிப்பிள்ளை கணபதிப்பிள்ளை
384. யா/கோ/10201திரு. சின்னர் பொன்னையா
385. யா/கோ/10214திருமதி. நவமணி பொன்னுத்துரை
386. யா/கோ/10248திரு. செல்வன் சபாபதிப்பிள்ளை
387. யா/கோ/10274திரு. கதிரேசு சிவபாதவிருதயா

## உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு

61. யா/உ_/1444 திருமதி.பாக்கியம் இராசையா
62. யா/உ_/1446 திருமதி.பாக்கியம் பொன்னையா
63. யா/உ_/1449 திரு.சிற்றம்பலம் பொன்னுத்துரை
64. யா/உ_/1460 திருமதி.இராசம்மா சந்திரசேகரம்பிள்ளை
65. யா/உ_/1462 திருமதி.இரத்தினம்மா சின்னப்பு
66. யா/உ_/1488 திரு.முருகேசு செல்லக்கண்டு
67. யா/உ_/1514 திரு.அம்பலவாணர் செல்லத்துரை
68. யா/உ_/1527 திருமதி.தெய்வானை வேலுப்பிள்ளை
69. யா/உ_/1553 திரு.நல்லையா விஜயரத்தினம்
70. யா/உ_/1555 திரு.கந்தையா வைத்திலிங்கம்
71. யா/உ_/1587 திரு.கனகரத்தினம் பாலச்சந்திரன்
72. யா/உ_/1597 திருமதி. பாக்கியரத்தினம் முருகேசு
73. யா/உ_/1599 திரு.வேதவனம் மார்க்கண்டு
74. யா/உ_/1601 திரு.கணபதிப்பிள்ளை மயில்வாகனம்
75. யா/உ_/1607 திரு.சின்னையா நல்லதம்பி
76. யா/உ_/1612 திரு.பொன்னையா நாகராசா
77. யா/உ_/1630 திரு.சுப்பிரமணியம் இராசரத்தினம்
78. யா/உ_/1684 திரு.சுப்பையா திருநாவுக்கரசு
79. யா/உ_/1747 திரு.வல்லிபுரம் நாகநாதர்
80. யா/உ_/1776 திரு.அப்பாத்துரை சிதம்பரப்பிள்ளை
81. யா/உ_/1779 திருமதி.செல்லம்மா பாலசுப்பிரமணியம்
82. யா/உ_/1780 திரு.தாமோதரம்பிள்ளை செல்லத்துரை
83. யா/உ_/1791 திரு.சீனிக்குட்டி சபாரத்தினம்
84. யா/உ_/1810 திரு.முருகேசு சின்னையா
85. யா/உ_/1822 திரு.சின்னத்தம்பி தர்மராஜன்
86. யா/உ_/1828 திரு.இளையதம்பி விக்கினராசா
87. யா/உ_/1830 திரு.தாமோதரம்பிள்ளை வன்னித்தம்பி
88. யா/உ_/1837 திரு.பொன்னையா அப்பாச்சிப்பிள்ளை
89. யா/உ_/1857 திரு.வேலாயுதபிள்ளை ஞானஸ்கந்தா
90. யா/உ_/!885 திரு.குமாரசாமி கனகரத்தினம்
91. யா/உ_/1906 திரு.வைரமுத்து மயில்வாகனம்
92. யா/உ_/1926 திரு.தம்பையா நடராசா
93. யா/உ_/1962 திரு.மருதகுட்டி இராசசிங்கம்
94. யா/உ_/1987 திரு.கணபதிப்பிள்ளை செல்லத்துரை
95. யா/உ_/2013 திரு.முத்து சுப்பிரமணியம்
96. யா/உ_/2095 திரு.மூத்ததம்பி ஆறுமுகம்
97. யா/உ_/2130 திரு.வீரவாகு கணிதசிங்கம்
98. யா/உ_/2189 திரு.கந்தையா செல்லையா
99. யா/உ_/2191 திரு.கந்தையா சொக்கலிங்கம்
100. யா/உ_/2242 திரு.சீனியர் வல்லிபுரம்
101. யா/உ_/2247 தீரு.காசிப்பிள்ளை வல்லிபுரம்
102. யா/உ_/2290 திரு.சரவணமுத்து கனகசபை
103. யா/உ_/2294 திருமதி. பரமேஸ்வரி சின்னத்தம்பி
104. யா/உ_/2295 திரு.சுப்பிரமணியம் பாலகுமார்
105. யா/உ_/2363 திரு.பொன்னையா நல்லையா
106. யா/உ_/2385 திரு.சின்னப்பா கணபதிப்பிள்ளை
107. யா/உ_/2397 திரு.கதிரன் நாகமுத்து
108. யா/உ_/2404 திரு.சின்னப்பா சின்னத்தம்பி
109. யா/உ_/2450 திரு.கைலாசபிள்ளை சிவபாதம்
110. யா/உ_/2452 திரு.பொன்னையா ஐயம்பிள்ளை
111. யா/உ_/2489 திரு.முத்துத்தம்பி இரத்தினம்
112. யா/உ_/2502 திரு.முத்தையா பாலசுப்பிரமணியம்
113. யா/உ_/2516 செல்வி. ஞானமலர் செல்லையா
114. யா/உ_/2541 திரு.சிவக்கொழுந்து அழகப்பெருமாள்
115. யா/உ_/2545 திரு.நாகலிங்கம் கணேசபிள்ளை
116. யா/உ_/2555 திரு.கந்தர் செல்லத்துரை
117. யா/உ_/2556 திரு.வயிரவன் சின்னத்தம்பி
118. யா/உ_/2593 திரு.சபாபதிப்பிள்ளை நித்தியானந்தன்
119. யா/உ_/2648 திரு.சின்னையா சிதம்பரப்பிள்ளை
120. யா/உ_/2649 திரு.தம்பையா பாலசிங்கம்
121. யா/உ_/2654 செல்வி.சந்திரவதி சரவணமுத்து
122. யா/உ_/2697 திரு.சுப்பையா அழகரத்தினம்
123. யா/உ_/2766 திரு.மயில்வாகனம் முத்துத்தம்பி
124. யா/உ_/2780 திரு.தம்பிப்பிள்ளை இராசையா
125. யா/உ_/2794 திரு.வேலாயுதம் நல்லதம்பி
126. யா/உ_/2816 திருமதி.அன்னலட்சுமி சின்னத்தம்பி
127. யா/உ_/2820 திருமதி.மகேஸ்வரி கந்தையா
128. யா/உ_/2826 திரு.கந்தையா தங்கராசா
129. யா/உ_/2880 திரு.அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி
130. யா/உ_/2934 திருமதி.ஜெயம் முருகேசு
131. யா/உ_/2945 திருமதி.தெய்வானைப்பிள்ளை ஆறுமுகம்
132. யா/உ_/2968 திரு.வயித்திலிங்கம் இராசரத்தினம்
133. யா/உ_/2984 திரு.செல்லையா சங்கரப்பிள்ளை
134. யா/உ_/3013 திரு.கணவதிப்பிள்ளை சோமசுந்தரம்
135. யா/உ_/3106 திரு.சுப்பர் மார்க்கண்டு
136. யா/உ_/3159 திரு.முருகேசு சுப்பிரமணியம்
137. யா/உ_/3192 திரு.நாகலிங்கம் சுப்பிரமணியம்
138. யா/உ_/3222 திரு.பண்டாரி ஆறுமுகம்
139. யா/உ_/3236 திரு.மார்க்கண்டு மகாதேவன்
140. யா/உ_/3252 திரு.சுப்பையா செல்லத்துரை
141. யா/உ_/3262 திரு.தில்லையம்பலம் ஐயாத்துரை
142. யா/உ_/3286 திரு.வேலாத்தை சின்னத்துரை
143. யா/உ_/3297 திருமதி.அன்னம்மா தம்பிமுத்து
144. யா/உ_/3329 திருமதி.சரஸ்வதி சோமசுந்தரம்
145. யா/உ_/3354 திரு.செல்லப்பா அப்பையா
146. யா/உ_/3366 திருமதி.சீவரத்தினம் காசியர்
147. யா/உ_/3474 திரு.சண்முகம் முத்தையா
148. யா/உ_/3475 திருமதி.அன்னமுத்து பொன்னையா
149. யா/உ_/3506 திரு.சின்னையா இரத்தினம்
150. யா/உ_/3511 திரு.பொன்னையா சிவநாதபிள்ளை
151. யா/உ_/3537 திரு.கந்தையா சுப்பிரமணியம்
152. யா/உ_/3543 திருமதி.ஜெகதீஸ்வரி சின்னையா
153. யா/உ_/3549 திரு.வுல்லிபுரம் மயில்வாகனம்
154. யா/உ_/3559 திருமதி.மகேஸ்வரி சொர்ணலிங்கம்
155. யா/உ_/3642 திரு.தம்பிப்பிள்ளை இராசையா
156. யா/உ_/3649 திரு.வல்லிபுரம் கணபதிப்பிள்ளை
157. யா/உ_/3681 திரு.சினனத்தம்பி மார்க்கண்டு
158. யா/உ_/3682 திருமதி.மகேஸ்வரி நடராசா
159. யா/உ_/3702 திருமதி.தங்கம்மா ஆறுமுகம்
தூங்கவில்லை தமிழ் மறவர்
தாகம் தமிழர் தாயகம்
தீர்க்க வென்று நீ மலராய்!

நாகமணி மகேந்திரலிங்கம்.

## இதய வீதி

அமைதி காக்கும்
அவள் முகம் போல
வெறிச்சோடிக் கிடந்தது
மேடையின் வெளி!
கலையிலே
நிலை இன்பம் காணவரும்
காற்றின் வேகமும்
மௌனித்து நிற்க
கண்ணர்விட்டு ஒளிரும்
மெழுகுதிரியின்
மரணங்கள் மலிந்ததாய்
இதய வதியில்
சாவுப் பறைமேளம்
சந்தியிலே முழங்கும்!
கண்ணிமைத்த வேளையில்
மேடையிலே பிணமருக்கும்
சோக அரங்கில்
பார்வையாளர் யாருமில்லை
ஆற்று வேராய்ப் பல முகங்கள்
நெறியாளர் மட்டும்
அறிகிறார் சேதிகளை...
அவள் இமைக்கும்
கண்களும் அமைதி காக்க
காரணத்தோடு வரும் கண்ணர்
காய்ந்து போகின்றது!

ஜோ. ஜெஸ்ரின்,
கொழும்புத்துறை

## நிலையான அமைதியை தருவாயே!

நலமியும் நாராயணா
நற்குடிப் பிறந்தோர்
தலவொழுக்கம் வழுவாது
குன்றென நின்றவர்
சீலம் கொள் மண்ணில்
சீரோங்க வாழ்ந்தவர்
விலங்கு மன மொத்த
வீணர் விளைத்த ஈனத்தால்
நிலமிழந்து மனை –
இழந்து நிம்மதியிழந்து
காலன் கொடுமையால் உற –
விழந்து கதியிழந்து
புலம்பெயர்ந்து புகலிடம்
தேடி கரையறியா
கலமாய் கலங்குதல் கண்ணா!
காணல்லையோ திருக்
கோல வடிவெடுத்து
கொடியரை யழித்த கோவிந்தா!
துலங்குமுன் துய்ய
திருவடி பணிந்தோம்
உலகம் போற்றும் தீபநன்
நாளில் இனமும் மொழியும்
ஆலமரமாய்த் தளைத்தோங்க
நிலையான அமைதியைத் தா!

கந்த தியாகராசா,
கோண்டாவில்.

## எப்பொழுதுதான்....



துளிவிழும் - இந்த
பனி இரவுகளில்
விழி மூடாமல்
இன்னும்
இரை மீட்டபடி...
எப்பொழுது முடியும்
நீளுகின்ற இரவும்
வளருகின்ற உன் நினைவும்......?

நெற்கொழுதாசன்.

## நிரந்தரமானவை

வாழ்க்கை எனும் முகவரியில்
சிரிப்புகள் தற்காலிக வலாசங்களே!
அழுகைகள்தான் நிரந்தரமானவை.

ஜெ. சுபாஷினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பாய் டெஸ்ட் போட்டியில் இந்தியா எதிர்பாராத வெற்றி

இந்திய அவுஸ்திரேலிய அணி களிடையே நடைபெற்ற நான்காவது இறுதி டெஸ்ட் போட்டியில் இந் திய அணி 13 ஓட்டங்களால் யாரும



எதிர்பாராத வண்ணம் வெற்றிபெற் றுள்ளது.

இந்தியா முதல் இன்னிங்ஸ்-104, அவுஸ்திரேலியா முதல் இன னிங்ஸ்-203, இந்தியா இரண்டாவது இன்னிங்ஸ்-205, 107 ஓட்டங்கள் என்ற எளிதான இலக்குடன் கள மிறங்கியது ஆசிய அணி. ஆனால் அதன் விக்கெற்றுக்கள் மள மள வென சரிந்தன.

லாங்கரும் ஹேடனும் ஆட் டத்தை ஆரம்பித்தனர். சஹீர் கானால் முதல் ஓவரிலேயே ஓட் டம் எதுவும் பெறாது லாங்கர் ஆட்டமிழந்தார். அடுத்து பென்டிங் 12 ஓட்டங்களுடன் முரளி கார்த் திக்கின் பந்துவீச்சில் ஆட்டமிழந் தார். தொடர்ந்துவந்த மாட்டினும்



அதே ஓவரில் எல்.பி.டபிள்யூ முறை யில் ஆட்டமிழந்தார். இந்த ஓவ ரில் முரளி கார்த்திக் ஓட்டமெது வும் எடுக்காமல் 2 விக்கெற்றுக களை வீழ்த்தியது சிறப்பம்சமாகும்.

ஹேடன் 24 ஓட்டங்களுடன் ஹர்பஜனின் பந்துவீச்சில் நேரடி யாக விக்கெற் வீழ்த்தப்பட்டு ஆட்ட மிழந்தார். கிளார்க்-7, கில்கிறிஸ்ற -5, சூரிச்-15, கஸ்பரோவிஸ்-7, மக் ராத்-0 அவுஸதிரேலியா அணி 93 ஓட்டங்களை மாத்திரம் பெற்று சகல விக்கெற்றுக்களையும் இழந் தது. இதன் மூலம் இந்திய அணி 13 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பந்துவீச்சில் ஹர்பஜன் 5 விக்



கெற்றுக்களையும், முரளிகார்த்திக் 3 விக்கெற்றுக்களையும், கும்ளே, சஹீர்கான் ஆகியோர் தலா ஒரு



விக்கெற்றையும் வீழ்த்தினர்.

இத்தொடரை 2:1, என்ற அடிப் படையில் அவுஸ்திரேலிய அணி வென்றுள்ளது.

இவ் இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக முரளி கார்த்திக்கும் தொடர் நாயகனாக டேமியன் மாட் டினும் தெரிவுசெய்யப்பட்டனர். (7)



பரிசில் நடந்து வரும் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில், ரஷ்ய வீரர் மாரட் சாபன் 6-4, 7-6 என்ற நேர் செட்களில் ஆஸ்திரேலிய வீரர் லேடன் ஹெவிட்டை வீழ்த்தினா

## விளையாட்டு செய்திகள்

# அட்வான்டா டென்னிஸ் தொடரில் ரஷ்ய வீராங்கனைகள் ஆதிக்கம்

அமெரிக்காவின் பிலடெல்பியா நகரில் நடைபெறும் முன்னணி



வீராங்கனைகள் பங்குகொள்ளும் அட்வான்டா டென்னிஸ் தொடரில் ரஷ்ய வீராங்கனைகளே தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

கடந்த வெள்ளியன்று நடை பெற்ற பெண்கள் ஒற்றையர் பிரி வின் காலிறுதிச் சுற்றுப் போட்டி யில், விம்பிள்டன் சம்பியனான ரஷ்ய வீராங்கனை மரிய ஷரபோவா, அவுஸ்திரேலியாவின் அலிகா மோலிக்கை எதிர்த்து விளையாடினர்.

ஷரபோவா 3:6,6:1,6:3என்ற செற் களில் வெற்றிபெற்று அரையிறு திக்குத் தகுதி பெற்றுள்ளார்.

இன்னொரு போட்டியில் ரஷ்யா வின் வெரா ஜுவோனரிவா 6:0, 6:1என்ற செற்களில் அமெரிக்கா வின் கேப்ரியாட்டியை வென்றார். இன்னொரு போட்டியில் உலகின் இரண்டாம் தர வீராங்கனையான பிரான்ஸின் அமெலி மவுரிஸ்மோ அமெரிகக வீனஸ் வில்லியம்ஸை 5:7,6:1 என்ற செற்களில் வென்றார்.

ஷரபோவாவுடன் இவர்கள் இரு வரும் அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர். (7)

# 7000 ஓட்டங்களைக் கடந்து ராகுல் டிராவிட் சாதனை

டெஸ்ட் போட்டியில் இந்திய வீரர் ராகுல் டிராவிட் 7,000ஓட்டங் களைக் கடந்து சாதனை படைத் துள்ளார்.




இதன்மூலம் 7,000ரன்களைக் கடந்த 3வது இந்திய வீரர் என்ற பெருமையையும், உலகத்தின் 24 ஆவது வீரர் என்ற பெருமையை யும் பெற்றிருக்கிறார்.

மும்பையில் நடைபெற்று அவுஸ் திரேலியாவிற்கு எதிரான 4ஆவது இறுதி டெஸ்ட் போட்டியில் இந் தியாவின் இரண்டாவது இன்னிங் ஸில் டிராவிட் இந்த சாதனையை படைத்தார் 31வயதான பெங்களூ ரைச் சேர்ந்த நட்சத்திர வீரரான டிராவிடடிற்கு இந்தப் போட்டி 82 ஆவது டெஸ்ட் போட்டியாகும். சச்சின் டெணடுல்கருக்குப் பதிலாக களமிறங்கிய டிராவிட்டிற்கு இந்த சாதனையை படைக்க 5 ஓட்டங் களே தேவைப்பட்டன.

மெகராத்தின் வீசிய பந்தை பவுணி அடித்ததன் மூலம் ராகுல் இந்த சாதனையை எட்டினார். தற்போது டிராவிட் டெஸ்ட் போட்டியில் அதிக ஓடடங்கள் குவித்தவர் பட்டியலில் சேர் டொனால்ட் பிரட்மனிற்கு (6,999 ரன்கள்) முந்திய இடத்தில் இருக்கிறா.

சுனில் கவாஸ்கர் மற்றும் சச்சின் டெண்டுல்கர் ஆகிய இரு வரும் டெஸ்ட் போட்டியில் ஏற் கனவே 7,000ஓட்டங்களைக் கடந்த மற்ற இரண்டு இந்திய வீரர்களா வர். முனனதாக இந்தப் போட்டியில் விக்கெற காப்பாளர் அல்லாத வீர ரொருவரில் அதிகபிடி எடுத்த இந் திய வீரர்களில் டிராவிட் முதலி டம் பெற்றார். அவுஸ்திரேலியாவிற்கு எதிரான முதல் இன்னிங்ஸ் முடிவில டிராவிட் 109 பிடிகளை பிடித்து சாதனை படைத்தார்.

இதன்மூலம் கவாஸ்கரின முந் தைய சாதனையான 108 பிடிகளை அவர் முறியடித்தார். கவாஸ்கர் இந்த சாதனையைப் படைக்க 125 டெஸ்ட்களில் பங்கேற்றார். டிரா விட் இதனை 82 போட்டிகளில் புரிந்திருப்பது குறிப்பிடத்தக்கது.(7)

## யாழ்.பல்கலை அணி தங்கம் வென்று சாதனை

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள சகல பல் கலைக்கழகங்களுக்கிடையியே வருடாந்தம் நடாத்தப்படும் விளை யாட்டுப் போட்டிகளில் 8ஆவது போட்டி இம்முறை கொழும்பு பல்கலைக்கழ கத்தால் நடாத்தப்படுகிறது.

இப்போட்டிகளில் 12 பல்கலைக் கழகங்களும் பங்குபற்றிய விலகல் முறையிலான கிரிக்கெற் போட்டி யில் யாழ்.பல்கலைக்கழகம் முத லிடத்தை பெற்று தங்கப்பதக் கத்தை வென்றிருக்கிறது.

யாழ்.பல்கலைக்கழக வரலாற் றில் இவ்வாறு தங்கம் வென்றது. இதுவே முதற் தடவையாகும்.

ரஜரட்ட, றுகுணு, களனி, கொழும்பு ஆகிய பல்கலைக்கழக அணிகளை எதிர்த்து விளையாடிய யாழ். பல் கலைக்கழக அணி 4 போட்டிகளி லும் வெற்றிபெற்றமை குறிப்பிடத் தக்கது. (7)

# ஊக்கமருந்து உட்கொண்ட குதிரைக்குப் பரிசோதனை

கடந்த ஒலிம்பிக் போட்டியில் குதிரையேற்றததில் தங்கம்வென்ற அயர்லாந்துக் குதிரைக்கு இரத் தப் பரிசோதனை நடாத்தப்படுமென சர்வதேச ஒலிம்பிக் சபை அறி வித்துள்ளது.

எதென்ஸ் ஒலிம்பிக்கின் குதி ரையேற்றப் பிரிவில் அயர்லாந் தைச் சேர்ந்த சியன் ஓ கான்னர் தங்கப பதக்கத்தைப் பெற்றார். அயர் லாநது சார்பில் பெறப்பட்ட ஒரேஒரு தங்கமும அதுதான். ஓ கானனரைச் சுமந்து கொண்டு தாவிக் குதித்து தங்கம் வென்ற குதிரையான கிரிஸ் டல் தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்தை உட்கொண்டதாக பரிசோதனை மூலம் தெரியவந்துள்ளது.

சிறுநீர் மாதிரியை பரிசோதனை செய்தபோதே இது தெரியாத வந் துள்ளது. இறுதிமுடிவும் உறுதி செய்யப்பட்டால் தங்கம் பறிக்கப் படும். விளையாட்டு உலகில் சர்ச் சையை இது ஏற்படுத்திய வேளை யில் பரிசோதனைக் கூடத்தில் இருந்த சிறுநீர் மாதிரி திருடப்பட் டிருககிறது. ஆயினும் மாதிரி இரத் தம் கைவசம் இருப்பதால் மீண் டும் பரிசோதனை செய்து முடிவு எடுக்கப்படும் என ஒலிம்பிக்சபை அறிவித்திருக்கிறது. அவ்வாறு பதக்



கம் பறிக்கப்பட்டால் அடுத்த இடத் தில் உள்ள பிறேசில் நாட்டின் ரோட்டிக் பெஸோவா தங்கத்தைப் பெறுவார். (7)



மும்பை கிரிக்கெட் டெஸ்ட் மூன்றே நாளில் முடிந்தாலும் இந்திய - ஆஸி., வீரர்களின் சமூக அக்கறைக்கு முடிவே இல்லை என்பதற்கு இந்த படமே சாட்சி. மும்பை அந்தேரியில் உள்ள குடிசைப்பகு திக்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் துணைத் தலைவர் அடம் கில்கிறிஸ்ட் அண்மையில் சென்றிருந்தார். அங்குள்ள மங்கேஷ் என்ற சிறுவனுக்கு சைக்கிள் ஒன்றை பரி சளித்தார் கில்கிறிஸ்ட்.

# பங்களாதேஷ் டனான போட்டிகளில் நியூசிலாந்து அமோக வெற்றி

பங்களாதேஷ்நியூசிலாந்து அணி களிடையே நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெற் போட்டித்தொடரையும் நியூசிலாநது அணி வென்றுள்ளது. இதன் மூலம் பங்களாதேஷ் அணி சொந்த மண்ணில் டெஸ்ட் தொட ரையும் ஒருநாள் தொடரையும் இழந்துள்ளது. இரு தொடர்களை யும் 2:0என்ற அடிபபடையில் நியூ சிலாந்து வென்றிருக்கிறது.

கடந்த வெள்ளியன்று டாக்கா வில் நடைபெற்ற இறுதி ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணி 43.4 ஓவர்களில் சகல விக்கெற் றுக்களையும் இழந்து 146 ஓட்டங் களை மாத்திரமே எடுத்தது.

சாலித் ஆகக்கூடுதலாக 44 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச் சில் ஸ்ட்றிஸ் 3 விக்கெற்றுக் களையும் மில்ஸ் பிராங்கிளின், ஹெயன்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து ஆடிய நியூசிலாந்து அணி சார்பில் கின்கிளையரும், நாதன அஸ்லேயும் சிறப்பாக ஆடி னர். இருவரும் இனப்பாட்டமாக 74 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது அஸ்லே 29 ஓட்டங்களு டன் ஆட்டமிழந்தார். ஸ்ட்றிஸ் 12 ஓட்டங்களைப் பெற்றார். சிறப் பாக ஆடிய கின்கிளையர் அரைச சதத்தைப் பூர்த்திசெய்து 62 ஓட் டங்களுடன் ஆட்டமிழந்தார்.

நியூசிலாந்து அணி விக்கெற் றுக்களில் ஐந்தை பங்களாதேஷ் வீரர் அகமது முதல் முதலாக வீழ்த் தினார். நியூசிலாந்து அணி 44.4 ஓவர்களில் 7 விக்கெற்றுக்களை இழந்து 148 ஓட்டங்களை எடுத் தது. இதன் மூலம் நியூசிலாந்து அணி 3 விக்கெற்றுக்களால் வெற்றி பெற்றது. (து-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணையாளரை பதவி நீக்க இடைக்கால தடை உத்தரவு

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபை ஆணையாளர் பதவியிலிருந்து ஜயந்த லியனகேயை இடைநிறுத்துவதற்கு மேன்முறையீட்டு நீதி மன்றம் கடந்த புதன்கிழமை இடைக்கால தடையுத்தரவு ஒன்றை விதித்தது.

இம்மாதம் 11 ஆம் திகதி வரை தடையுத்தரவு நீடிக்குமென மேன்முறையீட்டு நீதியரசர் சலிம் மர்சூப் தெரிவித்தார்.

மாநகர ஆணையாளர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து ஜயந்த லியனகே தாக்கல் செய்த மனுவில், பொதுச் சேவை ஆணைக்குழு, கொழும்பு மாநகரசபை மற்றும் மேல்மாகாண ஆளுநர் உட்பட 9 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர் 2001 ஆம் ஆண்டு 28 ஆம் திகதி முதல் மாநாகர ஆணையாளராக பதவி வகித்து வருகிறார்.

கொழும்பு பிரதேச சுகாதாரம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பெரும் பங்காற்றிய மனுதாரருக்கு எதிராக எதுவித முறைப்பாடுகளோ குற்றச்சாட்டுக்களோ இருக்கவில்லை.

ஆனால் குற்றப்பத்திரமோ எதுவித காரணமோ இன்றி மனுதாரர் ஆணையாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

பதவி நீக்கம் தொடர்பான கடிதம் கடந்த முதலாம் திகதி அனுப்பப்பட்டது.

இதனையடுத்து தன்னை பதவி விலக்கும் உத்தரவை ரத்துச் செய்யுமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

மனுதாரர் சார்பாக சரத்பெரேரா அசோசியேட் சனின் வழிகாட்டலுடன் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா நீதிமன்றில் ஆஜராகியிருந்தார். (க-10)

# கட்டாரில் உள்ள இலங்கைத் தூதுவர்

# தினேஸ் தர்மேந்திராவை விடுதலை செய்யுமாறு 'அல்ஜசீரா' தொலைக்காட்சி ஊடாக வேண்டுகோள்

(கொழும்பு)

ஈராக்கிய தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ள இலங்கையரான தினேஸ் தர்மேந்திரா இராஜரத்தினத்தை விடுதலை செய்யுமாறு, கட்டாரிலுள்ள இலங்கைத் தூதுவர் 'அல்ஜசீரா' தொலைக்காட்சி ஊடாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் காலை 'அல்ஜசீரா' தொலைக்காட்சி ஒன்றினூடாக ஈராக்கிய தீவிரவாதிகளிடம் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த தினேஸ் தர்மேந்திரா இராஜரத்தினம் தொழில் நிமித்தம் குவைத்திற்கு சென்றவர் எனவும், அவரது துணைவி மற்றும் ஐந்து பிள்ளைகளின் நலன் கருதியாவது அவரை விடுதலை செய்யுமாறு இலங்கைத் தூதுவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, ஈராக்கில் உள்ள பத்திரிகைகள் ஊடாகவும் தினேஸ் தர்மேந்திராவை விடுதலை செய்யுமாறு இலங்கத்தூதுவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதுமட்டுமன்றி தினேஸ் தர்மேந்திராவின் மனைவி டொறின் ரீட்டா புல்ஜன்ஸ் தனது கணவரை விடுதலை செய்யுமாறு கோரி தீவிரவாதிகளுக்கு அனுப்பியுள்ளதாகக் கூறப்படும் கடிதம் பற்றியும் ஈராக் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி வருகின்றன.

ஆனால், தீவிரவாதிகளோ தினேஸ் தர்மேந்திராவை விடுவிப்பதாகத் தெரியவில்லை. தினேஸ் தர்மேந்திரா பற்றிய எந்தவித தகவல்களையும் அந்த தீவிரவாதிகள் இதுவரை வெளியிடவும் இல்லை.

இதற்கிடையில் தினேஸ் தர்மேந்திராவைக் கடத்திய தீவிரவாத அமைப்பு ''இஸ்லாமிய இராணுவமா" அல்லது "அன்சருள் சுன்னா'' என்னும் தீவிரவாத அமைப்பா என்பது கூட இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

இந்நிலையில் தினேஸ் தர்மேந்திராவை விடுவிக்கக் கூடிய முயற்சியில் ஈடுபடமுடியாது இலங்கை அரசு தடுமாறுகிறது.

அத்துடன் ஈராக்கில் வைத்து தீவிரவாதிகளால் இலங்கையரான தினேஸ் தர்மேந்திரா எதற்காகப் கடத்தப்பட்டார்? அவரை விடுவிக்க அந்தத் தீவிரவாத அமைப்பு என்ன நிபந்தனைகளை விதிக்கப் போகிறது? என்ற ஏக்கத்தில் அரசு தற்போது இருப்பதாகக் கூறப்படுகிறது.

எது எவ்வாறாக இருந்தாலும், எந்தச் சவால்களுக்கும் முகம் கொடுக்கத் தயார் என்ற வகையில் கட்டாரில் உள்ள இலங்கைத் தூதுவர், தினேஸ் தர்மேந்திராவை விடுதலை செய்யவேண்டும் என்பதில் தீவிர ஆர்வம்காட்டியுள்ளமை இங்கு வரவேற்கத்தக்கதொன்றாகும். (க)

## விசேட பூசைகள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு தேசிய எழுச்சி பேரவையினால் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்த நாளையொட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி புங்குடுதீவு பிரதேச இந்து ஆலயங்களில் விசேட பூசைகள் நடைபெறவுள்ளன. (க-126)

# செய்தித் துளிகள்

## அபராதம்

(துன்னாலை)

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம், அனுமதியின்றி அரச சாராயத்தை விற்றதற்கான வழக்கில் பருத்தித்துறை 2ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த மு. பழனி என்பவருக்கும் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த வ.பூமணி என்பவருக்கும் தலா 7ஆயிரத்து 500 ரூபாவீதம் அபராதம் விதித்துள்ளார். (ப-101)

## வீதி திருத்தப்படவில்லை

(தனங்கிளப்பு)

கைதடியில் இருந்து கோப்பாய் வரையிலான வீதி பலத்த சேதமடைந்துள்ளது.

இவ் வீதியின் திருத்த வேலைக்கென ஏற்கனவே கற்கள் பறிக்கப்பட்டு ஒரு மாத காலம் சென்ற நிலையிலும் இன்னமும் வீதியைத் திருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால், இவ் வீதியால் பயணிப்போர் பலத்த சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். (ப-37)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், விவசாயக் குழுக் கூட்டமும் நாளை செவ்வாய்க் கிழமை பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-52)

## மின்கம்பம் சரிந்தது

(சாவகச்சேரி)

கடும் மழை காரணமாக கண்டி வீதியில் கைதடி அரசினர் மத்திய மருத்தகத்திற்கு அருகில் உள்ள உயர் அழுத்த மின்கம்பம் சரிந்ததில் தென்மராட்சிப் பகுதிக்கான மின் விநியோகம் கடந்த வெள்ளியன்று சில மணி நேரம் தடைப்பட்டது.

இதனையடுத்து பிற்பகல் கொட்டும் மழையிலும் சாவகச்சேரி மின்சார சபை உப அலுவலக ஊழியர்களின் திருத்த வேலைகளை மேற்கொண்டு மின் விநியோகத்தை சீராக்கினர். (ப-47)

## மரங்கள் கைப்பற்றப்பட்டன

(துன்னாலை)

அனுமதிப்பத்திரமின்றி இரண்டு சில்லு உழவு இயந்திரத்தில் கொண்டு செல்லப்பட்ட மரங்கள் நெல்லியடிப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கரவெட்டிப் பகுதியிலிருந்து கரணவாய் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்ட போதே இம் மரங்கள் கைப்பற்றப்பட்டன.

நெல்லியடிப் பொலிஸார் இவ் வாகனத்தை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.(ப-101)

## பொதுக் கூட்டம்

எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தென்மராட்சி கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசப் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளதாக சமாச நிர்வாகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-47)

## சிறுமியை மின் தாக்கியது

(கரவெட்டி)

புலோலி காந்தியூர் பகுதியில் மின்சாரக்கம்பி அறுந்து விழுந்ததில் அப்பகுதியால் சென்று கொண்டிருந்த சிறுமி ஒருவர் மின்சாரத்தினால் தாக்குண்டு மயக்கமுற்ற நிலையில், மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புலோலி காந்தியூரைச் சேர்ந்த இ.வினோதா (வயது 10) என்பவரே இவ்வாறு மின்சாரத்தினால் தாக்குண்டவராவார். (இ-105)

## திறப்புவிழா

(பருத்தித்துறை)

நியாப் திட்டத்தின் கீழ் கரவெட்டி அந்தணான் திடலில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொது மண்டபத்திறப்பு விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இத்திறப்புவிழா யாழ் அரச அதிபா எஸ் .பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பொது மண்டபத்தைத் திறந்து வைப்பார்.

வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளார் இ. தயா, 'நியாப்' பிரதித் திட்டப்பணிப்பாளர் பால கிருஷ்ணன, கரவெட்டி உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி பு.நட ராஜா ஆகியோர் சிறப்பு விருந் தினராகக் கலந்து கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-52, 101)

## கணனி கற்பித்தல் நிலையங்கள்

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டத்தில் தென்மராட்சி,வடமராட்சி வலி வடக்குப் பகுதிகளில் மூன்று கணனி கற்பித்தல் நிலையம் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நிதி வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் தென்மராட்சிப் பகுதிக்கான கணனி நிலையம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திலும் வடமராட்சிக்கான நிலையம் கரவெட்டி திரு இருதயக் கல்லூரியிலும், வலி வடகிற்கான நிலையம் அருணோதயாக் கல்லூரியிலும் அமைக்கப் படவுள்ளன. (ப-47)

## புனரமைப்பு

(பருத்தித்துறை)

விவசாய, காணி அமைச்சின் 10 ஆயிரம் குளங்கள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கு அம்பனில் உள்ள மண்டான்பிட்டிக்குளம் ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது.

கரவெட்டியிலுள்ள குமரப்பா குளமும் விவசாயத் திணைக்களத்தினால் சுமார் 2 இலட்சம் ரூபா செலவில் ஆழமாக்கி புனரமைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (க-52)

## 10 இலட்சம் பேருக்கு விரைவில் தொலைபேசி இணைப்புக்கள்

(கொழும்பு)

நாட்டில் 10 இலட்சம் பேருக்கு எதிர்வரும் ஓரிரு மாதங்களில் புதிதாகத் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

அதற்கான நடவடிக்கைகளை ரெலிக்கொம் நிறுவனம் மேற்கொண்டு வருவதாகத் தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த 10 வருடங்களாகத் தெலைபேசி கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு விண்ணப்பித்த ஒழுங்குப்படி தற்போது இணைப்பதற்கான பணம் செலுத்தும் படிவம் அனுப்பப்பட்டு வருகிறது.

13 ஆயிரத்து 500 ரூபா பணத்தை இரு தவணைகளில் செலுத்தி இணைப்பைப் பெறலாம் என ரெலிக்கொம் நிறுவனம் அறிவித்துள்ளது. (க)

## கூட்டம்

(துன்னாலை)

கரவெட்டிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், விவசாயக் குழுக் கூட்டம் என்பன நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ப-101)

## திருட்டு

கடந்த 2ஆம் திகதி இரவு கைதடிப் பகுதியில் உள்ள ஐந்து வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் பெறுமதி மிக்க பல பொருட்கள் திருடப்பட்டுள்ளதாகவும தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-47)

## குடிநீர் வழங்கும் திட்டம்

சாவகச்சேரி நகரசபையினால் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு அங்கமாக நகர சபைக் கட்டடத்தின் மையத்தில் நீர்த்தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் தூர இடங்களுக்கு நீர் வழங்குவதற்கு குழாய்கள் பொருத்தப்பட்டும் வருகின்றது. (ப-37)



வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபையின் 2004 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி வார பரிசளிப்பு விழாவில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட பிரதேச சபை செயலாளர் ஏ.எம்.ஜோசெப், கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி ஏ.அம்பலவாணர், பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையர் க.இராசையா, நெல்லியடி உப அலுவலகப் பொறுப்பதிகாரி ச.பரமேஸ்வரன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் இராஜேந்திரா ஆகியோரை நெல்லியடி பிரதேசசபை பாலர் பாடசாலை மாணவர்கள் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம். (படம்:-துன்னாலை செய்தியாளர்)







கரவெட்டி குழந்தை இயேசு முன்பள்ளிச்சிறார்களின் பெற்றோர் தினவிழாவில் பிரதம விருந்தினர்களை முன்பள்ளியின் பாண்ட் வாத்தியக்குழுவினர் வரவேற்று அழைத்துச் செல்வதனை முதலாவது படத்திலும், அந் நிகழ்வில் இடம்பெற்ற முன்பள்ளிச்சிறார்களின் நாட்டிய நிகழ்வினை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்:- கரவெட்டி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர். - குறள்

வலம்புரி

# பொருத்தமற்ற காலத்தில் பொருத்தமற்ற பணிகள்

இலங்கைபோன்ற நாடுகள் இன்னமும் அபிவிருத்தியை எட்டிக்கொள்ளாமைக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

அதில் "முதலீடு இன்மை" என்ற காரணம் முதன்மைப்படுத்தப்படுகின்றது. எனினும் அதற்கு அப்பால் "முகாமைத்துவம்" என்பதில் இருக்கக்கூடிய பெரும் பலவீனமே அபிவிருத்தி என்ற எண்ணக் கருவை எட்டுவதில் தடையாக இருக்கின்றது என்ற உண்மை உணரப்படவேண்டிய ஒன்றாகும்.

அதாவது, நேரமுகாமைத்துவ கடைப்பிடிப்பு முதல், வேலைத் திட்டமிடல் வரை எமது நாடு பின்னடைந்தே காணப்படுகின்றது.

அதிலும் யாழ்ப்பாணத்தின் நிலைமை மிகவும் மோசமானதாகும். அலுவலகங்களில் கடமை நேரம், அதன் முடிவு நேரம் என்பனவற்றில் இடம் பெறுகின்ற வெட்டுக்கள் நிர்வாகப் பணியில் "சிவப்பு நாடாவை" தோற்றுவித்துவிடுகின்றது.

அதிலும் ஏழை, படியாதவர் என்ற வர்க்கம் அரச மற்றும் அரசசார்பற்ற அலுவலகங்கள் ஊடாகச் செய்துகொள்ளவேண்டிய வேலைகளை நிறைவேற்றிக்கொள்வதில் படும்பாடு போதுமென்று ஆகிவிடும்.

எதை எடுத்தாலும் தட்டிக்கழித்துவிடும் அரச ஊழியர்களின் குறுகிய மனப்பாங்கே ஏழைமக்கள் அரச அலுவலகங்களுக்கு அலைந்து திரிவதற்கான காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

மக்கள் பணி செய்வதற்காகவே ஊதியம் பெறுகின்றோம் என்ற உணர்வு அறவே இல்லாத அரச ஊழியர்கள் பலர் அரச திணைக்களங்களை அலங்கரிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற சில அரச திணைக்களங்கள் ஏன்? எதற்காக இங்கிருக்கின்றன என்பதே தெரியாமல் இருக்கும் அளவிற்கு அவற்றின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

ஏதோ இலங்கையில் பிறந்துவிட்டார்கள் என்பதற்காக அரசு சிலரின் சீவியத்திற்கு சம்பளம் வழங்குகின்றது என்ற நினைப்பில், அத்தகைய அரச அலுவலகங்கள் பற்றி பொதுமக்கள் அதிகம் அலட்டிக்கொள்வதில்லை. இது ஒருவகை.

மற்றுமொரு வகையும் உண்டு. சில அரச அலுவலகங்கள் மிக உற்சாகத்துடன் செயற்படும். மக்கள் சேவைக்காக அங்குள்ளவர்கள் பெரும்பாடுபடுவர். ஆனால் அந்த அலுவலகத்தில் சில பதவிகள் இருக்கின்றனவே. அவற்றிற்கு எந்தப் பணியும் கிடையாது. இத்தகைய பதவிகள் செய்கின்றவர்களையும் குழப்பும் பதவிகளே ஆகும்.

இவ்வாறு அரச அலுவலகங்களின் முகாமைத்துவம் இருக்கும்போது, அபிவிருத்தி என்ற இலக்கை எட்டுவது கடினமான விடயமே.

மேலும் வேலைத் திட்டமிடல் என்பது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை நனைத்துச் சுமப்பதாகவே இருக்கின்றது. இதற்கு உதாரணமாக கைதடிப் பாலம், வல்லைப் பாலம் போன்றவற்றின் புனரமைப்பு வேலைகளைக் கூறலாம்.

இது மழைகாலம் என்பது தெரிந்தும் கைதடிப் பாலத்தைப் புனரமைக்கும் பணியை ஆரம்பித்திருக்கிறார்களே! இது நனைத்துச் சுமக்கும் வேலையல்லவா?

கைதடிப்பாலம் புனரமைக்கப்படவேண்டும் என துறைசார் வல்லுநர்கள் தீர்மானித்திருந்தால் அந்தப் புனரமைப்புப் பணியை மார்ச், ஏப்பிரல் மாதங்களிலேயே மேற்கொண்டிருக்கவேண்டும். குறிப்பிட்ட மாதங்களில் வேலையைச் செய்வதன் மூலம் நீரோட்டத்தைத் தடுக்கவும், வாகனப்போக்குவரத்துக்கான மாற்றுவழியை இலகுபடுத்தவும் முடிந்திருக்கும்.

ஆனால், இந்தக் காலப்பகுதியைத் தவறவிட்டுவிட்டு இப்போது கடல்பெருக்கு, மழைவெள்ளம் என்ற சவால்களுக்கு மத்தியில் "யாழ்ப்பாணத்து திட்டமிடல்" நீச்சல் போடுகின்றது.

வாகன போக்குவரத்து, சேறுசகதி என்ற அபாயங்களுக்குள் போராடுகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்துகொண்டு யாழ்ப்பாணத்தின் காலநிலையை உணராத "வல்லுநர்களின்" புத்தி முதலில் புனரமைக்கப்படவேண்டும் என கைதடிப் பாலத்திற்கும் பேசும் ஆற்றல் இருந்திருந்தால் நிச்சயம் அது கூறிக்கொள்ளும்.

# புதிய கல்விச் சீர்திருத்தம் கிராமப்புற மாணவர்களுக்கு நன்மை அளிக்கிறது

## மத்திய மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய கல்விச் சீர்திருத்தங்கள் கிராமப்புற பாடசாலை மாணவர்களுக்கு மிகுந்த நன்மை பயப்பதாக அமையும் என மத்திய மாகாண முதலமைச்சர் சரத் எக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக கல்வி அபிவிருத்தியைப் பாதித்த பிரச்சினைகளுக்கு இப்புதிய கல்விச் சீர்திருத்தங்கள் ஊடாக ஜனாதிபதி தீர்வு கண்டிருக்கிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கண்டி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முதலாம் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களில் 1.8 சதவதமானோரே பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றார்கள்.

எஞ்சிய 98.2 வீதமானோர் தொழில் வாய்ப்பைத் தேடும் போட்டியில் குதிக்க நேர்ந்திருக்கிறது.

புதிய கல்விச் சீர்திருத்தங்களில் இந்த பிரச்சினைகளிற்கு தீர்வு காணப்பட்டிருப்பதாக மத்திய மாகாண முதலமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (க-10)

# தீபாவளியை முன்னிட்டு யாழ்.நகரில் புடவை வியாபாரம் சூடு பிடிக்கிறது



தீபாவளியை முன்னிட்டு யாழ்.நகரில் புடவை வியாபாரம சூடு பிடித்துள்ளது. யாழ். குடாநாட்டில் பல பாகங்களில் இருந்தும் இதற்கென மக்கள் திரள் திரளாக யாழ். நகருக்கு வருகை தந்துள்ளதுடன், இம்முறை தென்பகுதி வியாபாரிகள் பலரும யாழ். நகருக்கு வந்து நடைபாதை புடவை வியாபாரத்தில ஈடுபட்டுவருதைக் காணக்கூடியதாகவுள்ளது. நேற்று முன்தினம் மக்கள் போக்குவரத்துக்கு மழை குறுக்கிட்டதால புடவை வியாபாரம் மந்த நிலையில் காணப்பட்டது. ஆனால நேற்றுக் காலநிலை சீராக இருந்ததால் பெருந்தொகையான மக்கள் யாழ்.நகருக்கு வருகை தந்து புடவை வாங்குவதில் ஆர்வம் காட்டினர்.

இதனால் வீதிப்போக்குவரத்துக்கு இடையூறாகவுள்ள நடைபாதை வியாபார நிலையங்களை அகற்றி மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கென பொலிஸார் பலர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் மற்றும் தனியார் மினி பஸ் என்பவற்றிலும் இடநெருக்கடி ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-19)

# ஊர்காவற்றுறைப் பிரதேச முதியோர்தினப் போட்டி முடிவுகள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தால் ஊர்காவற்றுறை பிரதேச பாடசாலைகளுக்கிடையில் முதியோர் தினத்தை ஒட்டி நடாத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன. அவை வருமாறு,

### கட்டுரை - கீழ்ப்பிரிவு

1ஆம் இடம்:- ம. ஆனால்ட் சரண்ஷன் - கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் மகாவித்தி.

2 ஆம்இடம் :- ஓ. டிலக்ஷனா - கரம்பன் சண்முகநாதன் மகாவித்தி.

3 ஆம் இடம்:- செ. துஷாந் - கரம்பன் சிறிய புஸ்ப மகளிர மகாவித்தி.

### மத்தியபிரிவு

1 ஆம் இடம்:- ம. மேரிடிசானி - ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தி.

2 ஆம் இடம்:- பா. சென்சலோமி - ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தி.

3 ஆம் இடம்:- பே. மேரிஜெறோசா - ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தி.

### மேற்பிரிவு

1 ஆம் இடம்:- ஜெ. யோசப் கிரிசேந்திரா - ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி

2 ஆம் இடம் :-ஹ. டர்சினா - கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் வித்தி.

3 ஆம் இடம்:-க.சுயாசினி - கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் வித்தி.

### கவிதை - கீழ்ப்பிரிவு

1 ஆம் இடம்:-எ. அல்பிரட் யூட்சன் - ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தி.

2 ஆம் இடம்:- ஜி.பகிர்தா- ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தி.

3 ஆம் இடம் வி. அஜந்தா -ஊர்காவற்றுறை புனி த மரியாள் மகளிர் வித்தி.

### மத்தியபிரிவு

1 ஆம் இடம்:- அ. மேரிகென்செப்ரா - ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தி.

2 ஆம் இடம்:- அ. மரியஜோறின் சிந்துஜா -ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தி.

3 ஆம் இடம்:- மா. ராசிகா - ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தி.

### மேற்பிரிவு

1 ஆம் இடம் :- செ. ரொனிபகீரதன் - ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி

2 ஆம் இடம்:- டோ. சுவிற்ரேகா - கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் வித்தி.

3 ஆம் இடம்:- ஜெ. யோசப் கிரிசேந்திரா - ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி

வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் அண்மையில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற முதியோர் தின விழாவில் வழங்கப்பட்டது. (ப-75)

# தீபாவளியை முன்னிட்டு மக்கள் வங்கி விசேட சேவை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி சேமிப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் மேலும் ஒரு சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் தீபாவளித் தினத்தில் மக்கள் வங்கியில் 15 ஆயிரம் ரூபாவை வைப்புச் செய்பவர்களுக்கு தீப விளக்கொன்று பரிசாக வழங்கப்படும்.

மேலும் சேமிப்புக் கணக்கில் இப்பணத்தை ஒரு வருடத்திற்கு வைப்பிலிடுவதன் மூலம் மேலும் பல சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், இக்கணக்கு மாதாந்தம மற்றும் வருடாந்தம் மேற்கொள்ளப்படும். ஜயசிறி சீட்டிழுப்பிலும் சேர்க்கப்படும் என மக்கள் வங்கி அறிவித்துள்ளது. மேலதிக விபரங்களை அருகிலுள்ள மக்கள் வங்கி கிளையுடன் தொடர்பு கொண்டு அறியுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-5)

# காஸ் விலையதிகரிப்புக்கு அனுமதிதர மறுத்தால் விற்பனையிலிருந்து விலகுவோம்

## செல்காஸ் நிறுவனம் அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் விலைகளை அதிகரிப்பதற்கு அனுமதிக்கப்படாவிட்டால் காஸ் விற்பனையில் இருந்து விலகிக் கொள்ளப்போவதாக செலகாஸ் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் இதுபற்றித் தெரிவிக்கையில்,

குறைந்த விலையில் சமையல் எரிவாயுவை விநியோகிப்பதன் காரணமாக கடந்த 11 மாதத்தில் 18 கோடி ரூபா நஷடம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

செல்காஸ் நிறுவனத்தின் சென்றவார நஷடத் தொகை 26 மில்லியன் ரூபா ஆகும்.

எனவே இனிமேலும் நஷடத்தில் இயங்குவதற்கு தயாராக இல்லை என கூறிய நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் இந்த நிலைமை தொடர்பாக அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். (க-10)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்

உங்களுக்குக் கிடைத்த ஒருதுளி இன்பத்தை எண்ணிப் பாருங்கள். இயற்கை தன் வேலையை உங்களைக் கொண்டு முடிக்கிறது. கடைசியில் நீங்கள் செடிகள் வளர உரமாகிறீர்கள். இருந்தும் இன்பத்தை நாமே சம்பாதித்ததாக நாம் எல்லோரும் நினைக்கிறோம் இப்படிச் சக்கரம் சுழன்று கொண்டு இருக்கிறது.

சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை எதிர்த்து பேசாலை மீனவர்கள் மறியல் போராட்டம்

(மன்னார்)

தலைமன்னார் கடற்பரப்பில் ஆயிரக்கணக்கான இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக்கொண்டிருப்பதை எதிர்த்து பேசாலையில் நேற்று முன்தினம் முதல் மூவாயிரத்துக்கு மேற்பட்ட தலைமன்னார் மீனவர்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பேசாலை வீதியில் தமது படகுகளையும், இழுவைப் படகுகளையும் கவிழ்த்து வைத்து இப்போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாக தலைமன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

பேசாலையிலிருந்து இரண்டு கிலோமீற்றர் கடல்மைல் தொலைவில் சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்ட தலைமன்னார் மீனவர்கள் மீன்பிடிக்க முடியாத நிலையில் கரைதிரும்பி இவ் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவுகின்றது. பாதையில் இரண்டு கிலோமீற்றர் தூரம்வரை தமது படகுகளையும் இழுவைப் படகுகளையும் கவிழ்த்து வைத்து போராட்டத்தில் ஈடுபட்டுவருவதாக கூறப்படுகின்றது.

சம்பவத்தை கேள்வியுற்ற உயர் பொலிஸ் அதிகாரிகளும், கடற்படையினரும் பேசாலை சென்று மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

ஆனால் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பதை நிறுத்த நடவடிக்கை எடுக்கும்வரை போராட்டத்தை கைவிடப்போவதில்லையென்று மீனவர்கள் அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

(க-121)

# யசூசி அகாசி புலிகளுக்கு சாதகமாகச் செயற்படுகிறாரா?

(கொழும்பு)

ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு உதவி வழங்கும் நிறுவனங்களை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஊடாக வழிநடத்த முனைவதாக தென்னிலங்கையில் உள்ள மனிதஉரிமைகள் மற்றும் சமாதானத்தை பேணுவதற்கும் பாதுகாப்பதற்குமான அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து மனித உரிமைகள் மற்றும் சமாதானத்தினை பேணுவதற்கும், பாதுகாப்பதற்குமான அமைப்பு என்று தம்மை கூறிக்கொள்ளும் அந்த அமைப்பு ஜாதிக ஹெல உறுமயவின் தலைவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

ஜப்பானிய தூதுவருக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற பேச்சுக்களின்போது இது குறித்துப் பேசப்பட்டுள்ளதாக அந்த அமைப்புத் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளது. கிழக்கு மக்களுக்கு வழங்கப்படும் உதவிகளை விடுதலைப் புலிகளினூடாக வழங்குவதற்கான உடன்பாட்டுக்கு வருவதன்மூலம் விடுதலைப் புலிகளை சமாதானப்படுத்த முற்படுவதாகவும் அக்கடிதத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (க)

# மன்னார் மீனவர் போராட்டத்திற்கு ஆதரவாக யாழ். மீனவரும் போரில் குதிக்க முஸ்தீபு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்கள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடிப்பதை எதிர்த்து மன்னார் மீனவர்கள் நடாத்தும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த யாழ்.குடாநாட்டு மீனவர்கள் சங்கங்களின் சமாசமும் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக சமாசத்தின் செயலாளர் சூரியகுமார் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட மீனவர்களால் நடாத்தப்படுகின்ற வீதி மறியல் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் பட்சத்தில் யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் ஒன்றிணைந்து இப்போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கத் த்யாராக இருக்கின்றனர்.

இந்திய இழுவைப் படகுகளினால் யாழ்.மாவட்ட மீனவர்களும், மன்னார் மாவட்ட மீனவர்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இதனால் இது விடயத்தில் அதிகாரிகள் தலையிட்டு உடன் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அவ்வாறில்லாத பட்சத்தில் மீனவர்களின் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும்வகையில் நாங்கள் ஒன்றிணைந்து யாழ் மாவட்டத்தில் போராட்டம் ஒன்றை நடாத்துவது தவிர்க்கமுடியாதது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த-121)

# 5 ஆயிரம் பேருக்கு ஜனவரியில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படும்

அடுத்த ஆண்டு ஜனவரியில் 5 ஆயிரம் பேருக்கு ஆசிரிய நியமனங்களை வழங்க கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆசிரிய சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படுபவர்களில் 3860 பேர் தேசிய பாடசாலைகளில் நியமிக்கப்படுவார்களென தேசிய பாடசாலைகளின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது பயிற்சிபெற்றுவரும் பட்டதாரிகளில் 2 ஆயிரத்து 360 பேரை ஆசிரிய சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

புதிய ஆசிரிய நியமனத்துடன் பாடசாலைகளில் நிலவிவரும் ஆசிரியப் பற்றாக்குறை தீரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(க-10)

# சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கணனிக் கற்கை நெறியினை பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று பிற்பகல் 3 மணிக்கு வேலணை கணனிப்பயிற்சி நிலையத்தில் தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் ப.குனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சி.செம்மணன், வேலணைசேர் வைத்திலிங்கம் துரைச்சாமி ம.ம. வித்தியாலய அதிபர் அருணகிரிநாதர், தீவகக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் கண்ணன், வேலணை பிரதேச பொறுப்பாளர் யாழ் நம்பி, யாழ் மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் எழிலன்பன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை இன்றையதினம் கணனி பயிற்சி நெறிக்கான புதிய பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

(ச)

## அடுத்த...

இதேவேளை ஜனாதிபதித் தேர்தல் 2005 ஆம் ஆண்டே நடத்தப்படவேண்டும் என்றும், 2006 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தப்படுமாயின் அது அரசியல் யாப்புப் பிரமாணங்களுக்கு விரோதமானது என்று ஐக்கிய தேசியக் கட்சி வாதாடி வருகிறது.

இந்நிலையிலேயே தேர்தல் செயலகத்தை மேற்கோள்காட்டி இலங்கை வானொலி இவ்வாறு தெரிவித்துள்ளது. (த-08)

## பலத்த...

முற்கூட்டியே அகற்றிவிடுவது பாதுகாப்பானது என வானிலை அவதான நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

மீனவர்கள் இத்தினங்களில் கடலுக்குச் செல்வதை தவிர்ப்பது நல்லது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வங்களா விரிகுடாவில் உருவாகியிருக்கும் தாழமுக்கம் காரணமாக தற்போதைய மழை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 5 ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து மறுநாள் காலை 9 மணிவரையான இருபத்துநான்கு மணிநேரத்தில் 50.7 மில்லிமீற்றர் மழை குடாநாட்டில் பெய்துள்ளதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் நேற்றுமுன்தினம் வரை 1066.3 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும், இது வருடாந்த மழை வீழ்ச்சியைக் காட்டிலும் 165 மில்லிமீற்றர் குறைவானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச-121)

10.30, 2.30, 6.30 இற்கு
கம்பஸ்
இரவு 8.30 இற்கு
SPIDER MAN 1
மிகவிரைவில்
ட்ரீம்ஸ்
யாழ்ப்பாணம்
(றீல்ஸ்)
(சி-675)

# இனப்பிரச்சினை தொடர்பில் ஐ.தே.க. நிலைப்பாடு என்ன?

## மல்வத்த மகாநாயக்கர் கேள்வி

நாட்டில் இருதசாப்த காலமாக இடம்பெற்றுவரும் இனப்பிரச்சினை தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமது கட்சியின் நிலைப்பாட்டை இன்னமும் தெளிவுபடுத்தவில்லை என மல்வத்த மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கலதேரர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான றோகித போகல்லாகம நேற்று முன்தினம் தேரரைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்துக்கூறுகையில்,

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் உருவாக்கப்பட்ட தேசிய நல்லிணக்க சபையில் ஐக்கிய தேசியக்கட்சி கட்டாயமாக பங்கேற்கவேண்டும்.

மேலும் சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்கும் என உறுதியளித்துள்ளமை தமக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருவதாகவும் தேரர் தெரிவித்தார். (த-121)

## சகல சமூகங்களும்...

இலங்கையில் பல்வேறு சமூகங்கள் வாழ்ந்துவருகின்றன. இதனால் ஐக்கிய இலங்கைக்குள் ஜனநாயக நெறிமுறைகளுக்கு அமைய தனித்துவ உரிமைகள் மதிக்கப்படவேண்டும்.

இலங்கையின் பாதுகாப்பு, ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாடு என்பன தொடர்பாக இந்தியா மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

இலங்கை அரசிற்கும் புலிகளுக்குமிடையில் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதில் இந்தியா மிகுந்த அக்கறைகொண்டுள்ளது.

நிர்வாகம் தொடர்பான இடைக்கால ஏற்பாடுகள் அனைத்தும் இறுதித்தீர்வாக அமையவேண்டும் எனவும், அது ஐக்கியத்தையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் மக்களின் பாதுகாப்பையும், அவர்களின் மேம்பாட்டையும் உறுதிசெய்வதாக அமையவேண்டும் எனவும் இந்தியா விரும்புகின்றது.

இலங்கையின் சமாதானச் செயற்பாடுகளில் ஏற்பட்டிருக்கும் தற்போதைய தேக்க நிலைமை மற்றும் அதனை எதிர்காலத்தில் எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்பன தொடர்பாக இந்தியத் தலைவர்களுக்கு ஜனாதிபதி எடுத்துக் கூறியுள்ளார்.

இருதரப்புப் பாதுகாப்புக் கூட்டுறவு உடன்படிக்கை மற்றும் பலாலி விமானப்படைத்தளம் புனர்மைப்புத் தொடர்பாக புரிந்துணர்வு உடன்பாடு என்பவற்றை இரண்டு அரசாங்கங்களுக்கும் இடையில் பொருத்தமான திகதியில் கைச்சாத்திடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சகலவிதமான பயங்கரவாத நடவடிக்கைகளையும், புதிய பயங்கரவாதக் குழுக்கள் உருவாவதையும் எதிர்ப்பதாகவும் இரண்டு நாடுகளும் தெரிவித்துள்ளன.

(த-121)

# மாவீரர் பெற்றோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் கல்லறைகள், நினைவுக்கற்கள் உள்ள மாவீரர்களின் பெற்றோர்கள் தங்களுக்கு அருகிலுள்ள பிரதேச, கோட்ட அரசியல்துறைச் செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல்துறையினர் கேட்டுள்ளனர்.

மாவீரர்தின இறுதிநாளான எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர்களின் நினைவுச் சுடரேற்றுவதற்காக பெற்றோர்களை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவே அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.(ச)

# பதவி வெற்றிடம்

## பத்திரிகை விநியோகஸ்தர்கள்

(யாழ். நகர மையத்திலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்திற்குள் உள்ள, சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் மட்டும்.)

தகுதியானவர்கள் நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகத்தர்

வலம்புரி,
15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

## பேச்சுவார்த்தை...

வார்த்தைகளில் கலந்துகொண்டோம். ஆனால் அரசு எம்மைத் தொடர்ந்தும் ஏமாற்றிவருகிறது. வடக்குக் கிழக்கில் பாரிய அபிவிருத்திப் பணிகள் எதனையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

அவ்வாறிருந்தும் இடைக்கால நிர்வாகசபை குறித்த எமது யோசனைகளை தற்போதைய அரசாங்கத்திடம் சமர்ப்பித்து அரசின் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம் என்றார். (த-61)

## உயிரிழந்த...

மண்டபம் அமைப்பதற்குத் தேவையான இடம் குறித்து ஆராயப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவிற்கும், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் கைச்சாத்தான ஒப்பந்தத்திற்கு அமைய 1987 ஆம் ஆண்டு இலங்கை வந்து வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களினால் 1700 இந்தியப் படையினர் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஆங்கில தினம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி ஆங்கில மன்றத்தினால் நடாத்தப்படும் ஆங்கில தினவிழா இன்று திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு இடம்பெறும்.

ஆங்கில மன்றத் தலைவர் செல்வி ஜெ.சாகிதாவின் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில், ஆங்கில பாட முதன்மை ஆசிரியர் வே.பரிமேலழகபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். இதில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.